# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்
# திருவள்ளுவராண்டு 2045 ஆனித் திங்கள் 17–ம் நாள்

2014–ம் ஆண்டு ஜீலை மாதம் 1–ஆம் தேதி (01.07.2014) செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

***********

**1. வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணைமேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் கொண்டுவரப்பட்ட நன்றித் தீர்மானம்.**

- உண்மை, வளம், வளர்ச்சி எனும் சீர்மிகு குறிக்கோள்களுடன் தமிழகத்தை வளர்ச்சிப் பாதையில் வீறுநடைபோடச் செய்து பல்வேறு ஆக்கப்பூர்வமான திட்டங்களை தமிழக மக்களுக்கு வழங்கி அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் கழக வாழ்நாள் பொதுச்செயலாளர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் தமிழகத்தில் 37 மக்களவை தொகுதிகளில் மகத்தான வெற்றி பெற்று சரித்திர சாதனை பெற்றுள்ளது. இம்மாபெரும் சரித்திர வெற்றிச் சாதனையினை நிகழ்த்திக் காட்டிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றிகளை காணிக்கையாக்குகின்றது.

1. **வணக்கத்துக்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களால் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2.** ஈரோடு மாநகராட்சி மாமன்ற தீர்மான எண்.85 நாள் 10.05.2012ல் 40 மைக்ரான் அளவுக்குட்பட்ட பிளாஸ்டிக் பைகளை மாநகராட்சிப் பகுதிகளில் பயன்படுத்த கூடாது எனவும் மீறினால் உபயோகிப்பாளருக்கு ரூ.100/– என அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்–2011 விதி எண்.10ல் மாநகராட்சிப் பகுதியில் உபயோகிப்பாளருக்கு எந்த ஒரு பிளாஸ்டிக் பைகளையும் (Carry Bags) விற்பனை செய்வோர் இலவசமாக வழங்க கூடாது என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பிளாஸ்டிக் பைகளின் குறைந்தபட்ச விலையை மாநகராட்சி மூலம் நிர்ணயம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பிளாஸ்டிக் கழிவுகளை கட்டுப்படுத்தும் பொருட்டும், அதன் பயன்பாட்டை குறைக்கும் பொருட்டும், ஒரு பிளாஸ்டிக் பையின் விலை

1. 10x12x160G 40 மைக்ரான் – ரூ. 2.50
2. 12x14x160G 40 மைக்ரான் – ரூ. 3.00
3. 13x16x160G 40 மைக்ரான் – ரூ. 3.50
4. 16x20x160G 40 மைக்ரான் – ரூ. 4.00

என நிர்ணயம் செய்யலாம். அனுமதியை எதிர்நோக்கி மாமன்ற பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**எச்1/2387/12**

**2. மண்டலத் தலைவர்களுடன் கூடிய குழு அமைத்து ஆலோசனை செய்து முடிவு செய்த பின் மீண்டும் பொருள் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டது.**

**3.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்—2ற்கு உட்பட்ட வார்டு எண்.27ல் செயல்பட்டு வரும் ஈரோடு காந்திநகர் கூட்டுறவு பண்டகசாலை லிட் ஏஏ 458ன் கீழ் பொது விநியோக திட்ட நியாய விலை அங்காடிக்கு போதிய கட்டிடமோ, இடவசதியோ இல்லாத காரணத்தால் மாநகராட்சி சிலம்பரான்குட்டை தினசரி சந்தை வளாகத்தில் தற்போது காலியாக உள்ள கடை ஒன்று ஒதுக்கீடு செய்து வழங்குமாறு கடிதம் வரப்பெற்றுள்ளது.

மேற்படி கூட்டுறவு சங்க நியாய விலை அங்காடிக்கு வாடகை அடிப்படையில் இடம் ஒதுக்கீடு செய்ய கோரிய கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/2093/13**

**3. தினசரி காய்கறி சந்தை வளாகத்திற்குள் நியாய விலைக்கடை அமைக்கப்பட்டால் போக்குவரத்துக்கு இடையூராக இருக்கும் என்பதால் இப்பொருள் ரத்து செய்யப்பட்டது.**

**4.** ஈரோடு மாநகராட்சி பகுதிகளில் திடக்கழிவுகளை உருவாக்கும் நிறுவனங்களை முறைப்படுத்தி கழிவுகளை சேகரிக்கவும், அவற்றினால் ஏற்படும் அதிக அளவிலான கழிவுகளை கையாளுவதற்கு மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினங்களை குறைத்திடவும், மாநகராட்சி பகுதியினை தூய்மையாக வைத்திடவும் கீழ்க்கண்டவாறு நிறுவனங்களிடம் நிர்வாகக்கட்டணம் வசூல் செய்து மாநகராட்சி மூலமாக திடக்கழிவுகளை அகற்ற கட்டணம் மாமன்றத்தின் 30.01.2013 தேதிய தீர்மானத்தில் கீழ்க்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்துள்ளது.

| வ. எண். | நிறுவனத்தின் தன்மை | நிர்வாகக் கட்டணம் ஒவ்வொரு மாதத்திற்கும் (புதியது) ரூ. | சேவைக் கட்டணம் (ஏற்கனவே நிர்ணயிக்கப் பட்டது) ரூ. |
|---|---|---|---|
| 1. | பேக்கரி | 300.00 | -- |
| 2. | அடுமனை வைத்து பேக்கரி தயாரிப்பது | 500.00 | -- |
| 3. | டிபன் ஸ்டால் | 300.00 | 100 |
| 4. | மெஸ் | 500.00 | 250 |
| 5. | உணவு விடுதி | 1000.00 | 400 |
| 6. | உணவுடன் கூடிய தங்கும் விடுதி | 3000.00 | 500 |
| 7. | குளிர்பானம் மற்றும் பழச்சாறு கடைகள் | 500.00 | 250 |
| 8. | பெரிய காய்கறி கடைகள்மற்றும் பழமுதிர் நிலையங்கள் | 3000.00 | 1000 |
| 9. | சிறிய காய்கறி கடைகள்மற்றும் பழமுதிர் நிலையங்கள்(16’x16’) | 500.00 | 500 |
| 10. | டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் | 3000.00 | 1000 |
| 11. | சிறிய மளிகைக் கடை | 300.00 | 200 |

| | | | |
|---|---|---|---|
| 12. | இதர நிறுவனங்கள் (நிபந்தனைக்குட்பட்டு) | 2000.00 | -- |
| 13. | Hardware stores பெரியது | 750.00 | -- |
| 14. | Hardware stores சிறியது | 250.00 | -- |

மேற்படி மாமன்றத்தால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிர்வாக கட்டணத்தை செலுத்தக் கோரி சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு மாநகராட்சியால் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதில் ஈரோடு மாவட்ட ஓட்டல்கள் சங்கத்தின் சார்பாக, உணவகங்களில் திடக்கழிவுகள் அகற்ற மாநகராட்சியிலிருந்து அதிகமாக கட்டணம் கட்ட அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி கட்டணம் அதிகமாக உள்ளது என்றும், தள்ளுபடி செய்து பழைய சேவை கட்டணத்தையே நிர்ணயிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

ஆகவே, மேற்படி ஈரோடு மாவட்ட ஓட்டல்கள் சார்பாக உணவகங்களில் திடக்கழிவுகள் அகற்ற மாநகராட்சியால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள நிர்வாக கட்டணத்தை குறைப்பது சம்பந்தமாக மாமன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு—**

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**எச்1/5043/12**

**4. மண்டலத் தலைவர்களுடன் கூடிய குழு அமைத்து ஆலோசனை செய்து முடிவு செய்த பின் மீண்டும் பொருள் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது.**

**5. 55—வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.பி. சுப்பரமணி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- அக்ரஹார வீதியின் கடைசியில் உள்ள (வாய்க்கால் கோவில் அருகில்) பொதுக்கழிப்பிடம் விஜயகுமார் என்பவரின் இடத்தில் (பட்டா நிலத்தில்) கட்டப்பட்டுள்ளது. மேலும் அந்த இடத்தில் நுழைவு வாயில் உள்ளதால் அவர் இடத்திற்கு செல்ல முடியவில்லை. இப்பொது கழிப்பிடத்தை அப்புறப்படுத்த இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**5. பொதுக்கழிப்பிடம் சம்மந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளதால் பெறப்படும் தீர்ப்பின் அடிப்படையில் மேல் நடவடிக்கை தொடரலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார்.**

**6.** ஈரோடு மாநகராட்சிக்குச் சொந்தமான VCTV சாலை திருமண மண்டபம் மற்றும் தமயந்தி பாபுசேட் திருமண மண்டபங்கள் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. மேற்படி மண்டபங்களுக்கு நகர்மன்ற தீர்மானம் எண்.1075 நாள்.30.11.1994 மற்றும் 1076 நாள் 30.11.1994-ன்படி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு சுமார் 19 வருடங்கள் கடந்து விட்டதால் நகரில் அமைந்துள்ள இதர திருமண மண்டபங்களுக்கு பலமடங்கு கட்டணம் உயர்த்தப்பட்டுள்ள நிலையில் மேற்படி மண்டபங்களின் பராமரிப்பு செலவு, காவலர்களின் ஊதிய உயர்வு ஆகியவற்றை கருத்தில் கொண்டு கீழ்க்காணும் விபரப்படி வாடகையை மாற்றியமைக்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | உபயோக நேரம் | VCTV ரோடு திருமண மண்டபம் | | தமயந்தி பாபுசேட் திருமண மண்டபம் | |
|---|---|---|---|---|---|
| | | தற்போது உள்ளது ரூ. | உத்தேச உயர்வு ரூ. | தற்போது உள்ளது ரூ. | உத்தேச உயர்வு ரூ. |
| 1. | முதல் நாள் காலை 6.00 மணிமுதல் மறுநாள் பிற்பகல் 3.00மணிவரை | 3000 | 15000 | 2000 | 10000 |
| 2. | முதல்நாள் பிற்பகல் 3.00மணி முதல் மறுநாள் பிற்பகல் 3.00மணிவரை | 2500 | 12500 | 1500 | 7500 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3. | பகல் 12.00மணி முதல் இரவு 12.00மணிவரை மற்றும் இரவு 12.00மணி முதல் பகல் 12.00மணிவரை | 1250 | 6250 | 750 | 4000 |
| 4. | அரசியல் கட்சி நிகழ்ச்சிகள், தொழில்சங்கங்கள், இதர தொண்டு நிறுவனங்களுக்கு கூட்டம் நடத்த (முகூர்த்தம் இல்லாத நாட்களில் மட்டும்) 8 மணிநேரம் | 400 | 2000 | 250 | 1500 |
| 5. | அரசு நிகழ்ச்சிக்கு நாள் ஒன்றிற்கு | 100 | - | 100 | - |

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**சே.மை/4770/13**

**6. மண்டலத் தலைவர்களுடன் கூடிய குழு அமைத்து ஆலோசனை செய்து முடிவு செய்த பின் மீண்டும் பொருள் கொண்டு வர தீர்மானிக்கப்பட்டது.**

**7. (54/873)** 25.02.2014ம் தேதிய சாதாரண கூட்டப் பொருள் எண்.54ல் ஒத்திவைக்கப்பட்ட வரிசை எண்.3ல் உள்ள ஏல இனத்திற்கு கீழ்க்கண்டுள்ளவாறு ஏலம் கோரியுள்ளார்.

| வ. எண் | ஏல இனம் | உச்சகேள்விதாரர் விபரம் திருவாளர்கள் | 2013-14-ம் ஆண்டு உரிமத் தொகை ரூ. | 3 ஆண்டு சராசரி | அரசு மதிப்பு | உச்ச கேள்வித் தொகை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3.** | **4.** | **5.** | | **6.** | **7.** |
| 3. | வ.உ.சி. பூங்கா மிதிவண்டி நிலையத்தில் இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | C. கிருஷ்ணமூர்த்தி S/o. சின்னுசாமி | 150300 | -- | 530000 | 531000 | கூடுதல் |

ஏலதாரர் திரு. சி. கிருஷ்ணமூர்த்தி த/பெ சின்னுசாமி என்பவர் அரசு மதிப்புத் தொகையைக் காட்டிலும் கூடுதலாக ஏலம் கோரியுள்ளார். ஆகவே உச்ச ஏலக்கேள்வித் தொகையினை ஏற்று ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2017 முடிய உரிமம் வழங்குவது குறித்து மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/6100/12**

**7. வ.உ.சி. பூங்கா மிதிவண்டி நிலையத்தில் இரு சக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு திரு. சி. கிருஷ்ணமூர்த்தி என்பவர் கோரியுள்ள உச்ச ஏலக்கேள்வித் தொகையை ஏற்றுக்கொள்ள தீர்மானிக்கப்படுகிறது.**

**8.** **வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணைமேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

**31.07.2013ம் தேதிய அவசர கூட்டம் (பொருள் எண்.2) (தீர்மான எண்.580)**

- ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம், 46புதூர் ஊராட்சி பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களிலும் நிலத்தடிநீர் கீழே சென்று விட்டதால் காசிபாளையம் மண்டலத்திற்குட்பட்ட 40வெண்டிபாளையம் கிராமத்தில் காவேரி கரையின் அருகாமையில் வருவாய்த்துறைக்கு சொந்தமான ரீ.ச.எண்.88/1 அனாதீனம் ச.புறம்போக்கு 0.40 சென்ட் பூமியில் ஆழ்குழாய் அமைத்து ரீ.ச.எண்.81,82,88 மற்றும் 90 வாய்க்கால் புறம்போக்கு, வண்டிபாதை, புறம்போக்கு வழியாக குடிநீர் குழாய் பதித்து, மின்கம்பங்கள் நிறுவி மின்இணைப்பை தலைவர் 46புதூர் ஊராட்சி என்ற பெயரில் வாங்குவதற்கும், மேலும் 46புதூர் ஊராட்சிநிதி, சட்டமன்ற உறுப்பினர் நிதி மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நிதி மூலம் செயல்படுத்துவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

  தற்போது மேற்படி தீர்மானத்தில் வருவாய்த்துறைக்கு சொந்தமான ரீ.ச.எண்.88/1 அனாதீனம் ச.புறம்போக்கு 0.40 சென்ட் பூமியில் **ஆழ்குழாய் அமைத்து** என உள்ளதை **ஆழ்குழாய் மற்றும் திறந்தவெளி கிணறு அமைத்து** என திருத்தம் செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**8. வணக்கத்துக்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**9.** **வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணைமேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் கொண்டுவரப்பட்ட இரங்கல் தீர்மானம்.**

- ஈரோடு நகர்மன்றத்தின் முன்னாள் துணைத் தலைவர் திரு. ஈ.வி.கே. செல்வராஜ் அவர்களின் மறைவிற்கு இம்மாமன்றம் தனது ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கின்றது.

**9. வணக்கத்துக்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**10.** **3–வது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்.**

- மாநகராட்சி வார்டு எண்.54 நடராஜா தியேட்டர் பின்புறம் 300 குடும்பங்கள், 1000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் வசிக்கின்றனர். இப்பகுதி பொதுமக்களின் பயன்பாட்டிற்காக நடராஜா தியேட்டர் பின்புறம் உள்ள காலியிடத்தில் சமுதாயக்கூடம் ஒன்றினை கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஈரோடு மின்மயானம் மாலை 6 மணியுடன் முடிவடைவதால் ஈரோடு வாழ் பொதுமக்கள் மிகுந்த சிரமப்பட்டு இறுதிச்சடங்கிற்காக குமாரபாளையம் மற்றும் திருச்செங்கோடு சென்று பிரேத தகனம் செய்யும் சூழ்நிலை உள்ளது. எனவே ஈரோடு ஆத்மா மின்மயானம் இரவு 10 மணி வரை செயல்பட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**10. 3ஆவது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் முன்மொழிய 2ஆவது மண்டலத் தலைவர் திரு. பி. கேசவமூர்த்தி அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஈரோடு ஆத்மா மின் மயானம் இரவு 9 மணி வரை செயல்பட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.**

**11. 13ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

திருநகர் காலனி வீதி 1 முதல் திருநகர் காலனி வீதி 5 வரை உள்ள (5)ஐந்து வீதிகளில் பழுதடைந்துள்ள கழிவுநீர் வடிகாலை புதுப்பித்துதர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**11. 13ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எம்.கே. ராஜா முன்மொழிய 15ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. க. அண்ணாமலை அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**12. 29ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. இராமச்சந்திரன் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- காந்திபுரம் 1,2,3 ஆகிய வீதிகளில் உள்ள பழுதடைந்த இருபக்க சாக்கடைகளை மராமத்துப்பணிகள் செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வார்டு பகுதி முழுவதும் உள்ள தெருக்களுக்கு பெயர்ப்பலகை வைத்துதர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**12. 29ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. பொ. இராமச்சந்திரன் அவர்கள் முன்மொழிய 10ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி.சி. நடராஜன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**13. 42ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். மோகனா அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- என்.ஜி.ஜி.ஓ காலனி மெயின் வீதி காந்திநகர் தண்ணீர் டேங்க் அருகில் இருந்து நிட் இந்தியா பிரிவு வரை உள்ள பழுதடைந்த கழிவுநீர் சாக்கடையின் இருபுறமும் புதுப்பித்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- என்.ஜி.ஜி.ஓ காலனி 8வது வீதியில் இருபுறமும் கழிவுநீர் செல்வதற்கு சாக்கடை அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மாரப்பா வீதி3ல் எஸ்.கே.சி மெயின்ரோட்டில் இருந்து என்.ஜி.ஜி.ஓ காலனி 2வது வீதி வரை வலதுபுறம் கழிவுநீர் சாக்கடை அமைத்துக் கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**13. 42ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. எஸ். மோகனா முன்மொழிய 30ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. கே. லட்சுமி வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**14. 54–ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. எச். சபுராமாமின்ஹாஜ் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- கச்சேரி வீதி பின்புறம் வீதியிலுள்ள சாக்கடைகளை இடித்து ஆழப்படுத்தி கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிது.
- நடராஜா தியேட்டர் அம்மா உணவகம் அருகில் ஓடையின் கரையை சுற்றி சுற்றுச்சுவர் கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- வெங்கிடுசாமி வீதியில் உள்ள போர்வெல் கை பம்பில் சப்மெர்சிபில் மோட்டார் வைத்து 2000லி தொட்டி அமைத்து வார்டு அலுவலகத்திற்கு தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- ஜீவானந்தம் சாலை ஆடுவதை கூடத்தில் இருந்து ஒடை வரை செல்லும் சாக்கடைகளுக்கு சில் அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**14. 54ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. எச். சபுராமாமின்ஹாஜ் அவர்கள் முன்மொழிய 58ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கி. புனிதன் அவர்கள் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**15. 32–ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி.பி. இளங்கோ அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

- குடிநீர் தட்டுப்பாடு உள்ள பகுதிகளான வீரப்பம்பாளையம் , வெட்டுக்காட்டு வலசு மற்றும் நாச்சாய் டீக்கடை ஆகிய பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைத்துதர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- வீரப்பம்பாளையம் மயானத்தின் பழுதடைந்துள்ள மதில்சுவற்றினை உயர்த்தி புதுப்பித்து கொடுத்தும் அப்பகுதியில் ஒரு ஆழ்குழாய் கிணறு அமைத்து மின்மோட்டாருடன் சின்டெக்ஸ் தொட்டி வைத்து மயானத்திற்கு வரும் பொதுமக்களுக்கு வசதி ஏற்படுத்தித்தர இம்மாமன்ற தீர்மானிக்கிறது.

**15. 32ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. வி.பி. இளங்கோ முன்மொழிய 33ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.ஜி. ராதா வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**16. 35–ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். தங்கவேல் அவர்களால் கொண்டுவரப்பட்ட தீர்மானம்.**

<u>**கீழ்க்கண்டுள் பகுதிகளுக்கு சாக்கடை வசதி ஏற்படுத்தி கொடுக்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.**</u>

- அணைக்கட்டு ரோடு 4–வது வீதியின் இடது மற்றும் வலது புறச்சாலைகள்.
- உமாபிரஸ் பின்புறம்.
- அணைக்கட்டு பகுதி மற்றும் அன்னை நகர் முதல் சுத்தானந்தன் நகர் வரை.
- அன்னைநகர் பகுதி 4 வீதிகள் மற்றும் ஓடைமேடு முதல் பழையபாளையம் மெயின்ரோட்டில் உள்ள குறுக்கு வீதிகள்.
- பழையபாளையம் மாரியம்மன் கோவில் மற்றும் பழையபாளையம் மெயின் ரோடு முதல் ஓடைமேடு செல்லும் வழிச் சாலைகள்.
- பழையபாளையம் குறுக்கு வீதிகள் மற்றும் பழையபாளையம் விநாயகர் கோவில் எதிர்புறம்.
- பழையபாளையம் எம்.எல்.ஏ ஆபீஸ் பின்புறம் இந்து நகர் மூன்று வீதிகள்.
- பழைய ஆர்.டி.ஓ ஆபீஸ் வீதி மற்றும் குறுக்கு வீதிகளுக்கும்.
- அம்பிகை நகர் அருவேப்பிலை கருப்பணார் கோவில் அருகில் இருந்து அணைக்கட்டு வரை.
- அணைக்கட்டு ரோடு முதல் பழையபாளையம் ரோடு வரை.

– – – – – –

- அணைக்கட்டு பகுதியில் உள்ள அனைத்து வீதிகளுக்கும் கான்கிரீட் சாலை அமைத்து கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- அணைக்கட்டு எம்.எஸ்.கே நகர் ஆழ்குழாய் கிணற்றினை ஆழப்படுத்தி கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

- 35–வது வார்டு பகுதி முழுவதிலும் பாதாள சாக்கடை பணிகளினால் பழுதாகிய சாக்கடைகளை பழுதுபார்த்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது
- 35ஆவது வார்டு பாதாள சாக்கடைப்பணிகள் முடிவடைந்த அனைத்துப் பகுதிகளிலும் தார்சாலைகள் அமைத்துக் கொடுத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**16. 35ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.எஸ். தங்கவேல் முன்மொழிய 38ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.சொர்ணம் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**17.** ஈரோடு மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரித்துவர தேவையான உதிரிபொருட்களை ரூ.20.00 இலட்சம் உத்தேச செலவில் வாங்கி பயன்படுத்த வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி 12.05.2014 தேதியன்று பெறப்பட்டு 03.06.2014 தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1. M/s. Sree Bharath associates, Erode.
2. Thiru P.Dhandapaniraj, Erode.
3. M/s. Malani Lighting Co., Thirunelveli

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் வ.எண்.1 மற்றும் 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி டேவணித்தொகை மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலையினை வழங்கியும், ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைபடியான தகுதிக்கான சான்றுகளை வழங்கியும் ஒப்பந்தப்புள்ளிகளை வழங்கியுள்ளன. வ.எண்.3ல் குறிப்பிடப்பட்டுள்ள M/s.Malani lighting company, Thirunelveli நிறுவனம் டேவணித்தொகை ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான விலை மற்றும் ஒப்பந்தப்புள்ளி சிறப்பு நிபந்தனைப்படியான தகுதிக்கான சான்றுகளை வழங்காமல் ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளது. எனவே மேற்கண்ட M/s.Malani lighting company, Thirunelveli நிறுவனம் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி தகுதி பெறவில்லை.

எனவே தகுதி பெற்றுள்ள வ.எண்.1 மற்றும் 2-ல் கண்டுள்ள M/S. Sree Bharath associates, Erode. நிறுவனம் மற்றும் Thiru P.Dhandapaniraj, Erode. ஆகியோர் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதங்கள் பின்வருமாறு.

| வ. எண் | பொருட்களின் பெயர் | எண்ணிக்கை | M/s. Sree Bharath associates Erode. | | Thiru P.Dhandapaniraj, Erode. | |
|---|---|---|---|---|---|---|
| | | | Rate/ Each | Amount | Rate/ Each | Amount |
| 1 | 40w FTL bulb | 4000 | 46.00 | 184000 | 46.20 | 184800.00 |
| 2 | 40w FTL choke | 1150 | 204.90 | 235635 | 205.50 | 236325.00 |
| 3 | 40w FTL starter | 3685 | 9.00 | 33165 | 9.10 | 33533.50 |
| 4 | 40w side holder | 2000 | 9.90 | 19800 | 9.95 | 19900.00 |
| 5 | 36w CFL bulb | 480 | 169.00 | 81120 | 169.50 | 81360.00 |
| 6 | 36w CFL choke | 760 | 190.00 | 144400 | 190.50 | 144780.00 |
| 7 | 24w T5 bulb | 575 | 159.00 | 91425 | 159.50 | 91712.50 |
| 8 | PVC Insulation tape | 650 | 14.00 | 9100 | 14.10 | 9165.00 |
| 9 | 70w SVL bulb | 85 | 270.00 | 22950 | 271.00 | 23035.00 |
| 10 | 70w SVL choke | 50 | 924.00 | 46200 | 925.00 | 46250.00 |
| 11 | 150w SVL bulb | 115 | 379.00 | 43585 | 379.00 | 43585.00 |
| 12 | 150w SVL choke | 60 | 1299.00 | 77940 | 1300.00 | 78000.00 |
| 13 | 250w SVL bulb | 160 | 435.00 | 69600 | 435.50 | 69680.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14 | 250w MH bulb | 60 | 950.00 | 57000 | 951.00 | 57060.00 |
| 15 | 250w MH choke | 115 | 1899.00 | 218385 | 1900.00 | 218500.00 |
| 16 | SVL Ignitor | 480 | 199.00 | 95520 | 199.20 | 95616.00 |
| 17 | 250w SVL holder | 190 | 165.00 | 31350 | 167.00 | 31730.00 |
| 18 | 3/20 Aluminium wire | 65 | 435.00 | 28275 | 436.00 | 28340.00 |
| 19 | 7/20 Aluminium wire | 35 | 727.00 | 25445 | 760.00 | 26600.00 |
| 20 | 7/16 Aluminium wire | 17 | 2030.00 | 34510 | 2033.00 | 34561.00 |
| 21 | 400 watts MH bulb | 25 | 975.00 | 24375 | 976.00 | 24400.00 |
| 22 | 400 watts SVL/MH choke | 32 | 2975.00 | 95200 | 2993.00 | 95776.00 |
| 23 | 32 amps 2 pole contactor | 25 | 840.00 | 21000 | 853.00 | 21325.00 |
| 24 | Timer clock | 54 | 2750.00 | 148500 | 2752.00 | 148608.00 |
| 25 | 63 amps 4 pole contactor | 37 | 1750.00 | 64750 | 1753.00 | 64861.00 |
| 26 | 32A porceline fuse carrier set | 34 | 285.00 | 9690 | 285.50 | 9707.00 |
| 27 | 63A porceline fuse carrier set | 25 | 450.00 | 11250 | 454.00 | 11350.00 |
| 28 | 15A, 230 VDP switch | 160 | 150.00 | 24000 | 155.00 | 24800.00 |
| 29 | 15W CFL bulb | 195 | 150.00 | 29250 | 155.00 | 30225.00 |
| 30 | 230 volt L & T contactor | 40 | 350.00 | 14000 | 355.00 | 14200.00 |
| | மொத்தம் | | | 19,91,420- | | 19,99,785/- |

மேற்கண்ட இரண்டு நிறுவனங்கள் வழங்கியுள்ள ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதங்கள் மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகின்றன.

அலுவலகக் குறிப்பு–

1. மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் M/S. Sree Bharath associates, Erode. நிறுவனம் வழங்கியுள்ள விலைவிகிதங்கள் குறைவாகவும், உள்ளூர் விலைவிகிதத்திற்கு ஏற்புடையதாகவும் உள்ளதால் அவற்றை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்பு பணியின் அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதங்கள் வழங்கியுள்ள M/S. Sree Bharath associates, Erode. நிறுவனத்திற்கு விநியோக உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/2386/14**

**17. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**18.** ஈரோடு மாநகராட்சியில் அனைத்து மண்டலங்களிலும் உள்ள தெருவிளக்குகளை பராமரித்துவர தேவையான உதிரிபொருட்களின் இருப்பு குறைவாக உள்ளது. தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் தெருவிளக்கு மின்சிக்கன நடவடிக்கை திட்டப்பணியில் மின்சார தணிக்கை முடிவுற்று தணிக்கை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு மூன்றாம் தரப்பு நிறுவனம் மூலம் சரிபார்ப்புப்பணி (Third Party Inspection) மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்டபணி முடிவுற்று திட்டம் செயல்படுத்தப்படும் போது தான் தெருவிளக்கு பராமரிப்புப்பணி தனியார் மூலம் மேற்கொள்ளப்படும். எனவே அதுவரை தெருவிளக்கு பராமரிப்புப் பணிகளை மாநகராட்சி பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. ஆகவே தெருவிளக்குகளை வரும் மூன்று மாதங்களுக்கு பராமரிக்க தேவைப்படும் உதிரிப்பொருட்களை ரூ.20.00 இலட்சம் உத்தேச செலவில் வாங்கி பயன்படுத்த மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தெருவிளக்கு பராமரிப்புப்பணியின் அவசியம் கருதி மேற்கண்ட தெருவிளக்கு உதிரிப்பொருட்களை வாங்க மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்கு மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/2386/14**

**18. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**19.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து மேல்நிலை தொட்டிகள் மற்றும் தலைமை நீரேற்று நிலையங்களில் குடிநீரில் கிருமி நாசினியாகப் பயன்படுத்தும் கிரேடு–1 பிளீச்சிங் பவுடர் 100 டன் ரூ.21.75 இலட்சம் மதிப்பில் வாங்குவதற்கு மாமன்ற தீர்மான எண்.541 நாள் 29.05.13ல் அனுமதியளித்ததைத் தொடர்ந்து 3ஆம் கட்டமாக ரூ.5.00 இலட்சம் மதிப்பில் 24 டன் பிளீச்சிங் பவுடர் விநியோகம் செய்ய 30.05.14 அன்று இ–டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் விபரம் கீழ்வருமாறு–

| | ஒரு டன் | 24 டன் |
|---|---|---|
| திரு. ஏ. செல்வராஜ், ஈரோடு | ரூ.23,380/– | ரூ.5,61,120/– |

மேற்படி ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனையின்படி ஒப்பந்தப்புள்ளி படிவத்திற்கான கட்டணம் மற்றும் டேவணித் தொகை ஆகியவற்றை அலுவலகத்தில் செலுத்தியுள்ளார். இதே எண்ணிட்ட கடிதத்தில் இப்பணிக்கு மேலும் விலையை குறைத்துக் கொடுக்க கேட்கப்பட்டதில் மேற்படி ஒப்பந்ததாரர் இப்பணிக்கு டன் ஒன்றுக்கு ரூ.630/– குறைத்து ரூ.22750/– டன் ஒன்று விநியோகம் செய்தாகத் தெரிவித்து 06.06.14 அன்று கடிதம் வழங்கியுள்ளார். எனவே மேற்படி திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பிளீச்சிங் பவுடரின் இருப்பு குறைவாக உள்ளதால் பிளீச்சிங் பவுடரின் தேவையை கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்ற ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/2054/13**

**19. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**20.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2ற்குட்பட்ட வி.சி.டி.வி. ரோட்டில் உள்ள சுதந்திர தின வெள்ளி விழா பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக எவரும் ஏலம் கோருவதற்கு முன்வராத காரணத்தால், துறை மூலம் நாளது தேதி வரையிலும் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு முறையும் பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோரும் போதும் எவரும் மேற்படி உரிமத்திற்கு வைப்புத் தொகை செலுத்த முன்வருவது இல்லை. ஆகவே நாளது தேதி வரையிலும் துறை மூலமே வசூல் செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. குணசேகரன் மற்றும் 3 நபர்கள் 06.06.2014ஆம் தேதிய மனுவின் மூலம் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு, பேருந்து நிலையத்தில் தேங்கும் குப்பைகளை மாநகராட்சி துப்புரவு பணியாளர்களை கொண்டு அகற்றும் பணிக்கு நிர்ணயம் செய்துள்ள தொகை மிகவும் அதிகமாக உள்ளதாகவும், மேற்படி சுகாதாரப் பணியினை தங்களது சொந்த செலவில் பணியாளர்களை கொண்டு பொது சுகாதாரப்

பணியினை ஏற்றுக் கொள்வதாகவும், மேற்கண்ட துப்புரவு பணியாளர்களின் ஊதியத் தொகையை தவிர்த்து பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைத்தால் ஏலம் கோர முன்வருவதாக விண்ணப்பத்தின் மூலம் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மேற்படி மனுதாரர்களின் கோரிக்கையின்படி துப்புரவு பணிக்கான தொகையை தவிர்த்து அவர்கள் சொந்த செலவில் பணியாளர்களை அமர்த்தி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி வைப்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/6100/12**

**20. துப்புரவு பணிக்கான தொகையைத் தவிர்த்து மனுதாரர் தனது சொந்த செலவில் பணியாளர்களை அமர்த்தி பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர முன் வந்துள்ளதால் மேற்படி இனத்தை பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி விட தீர்மானிக்கப்பட்டது.**

**21.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கம் (IUDM) **2013–14**ன் கீழ், மழைநீர் வடிகால் கட்டுதல் பணிகளை ரூ.**902.80** இலட்சத்தில் மேற்கொள்ள, தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணைகள் அனுப்பப்பட்டது. அதில் ரூ.**739.80** இலட்சத்தில் புதிதாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.37191/2012/இ1, நாள் **19.09.2013** மற்றும் அரசாணை (டி) எண்.**492**, நாள் **19.09.2013**ல் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஏற்கனவே அனுப்பப்பட்ட பிரேரணைகளில் அனுமதி பெறப்பட்ட பணிகள் போக, மீதமுள்ள ஏனைய மழைநீர் வடிகால் மறுசீரமைத்தல் பணிகளை ரூ.163.00 இலட்சத்தில் சுமார் **3.275** கி.மீ நீளத்தில், மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தீர்மான எண். **590** நாள் **31.07.2013**ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண்.23 சத்திநகர் மற்றும் எம்.ஜி.ஆர் வீதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் வார்டு எண்.30 ராஜாஜிபுரம் முதல் மற்றும் இரண்டாம் குறுக்கு வீதிகளில் மழைநீர் வடிகால் சீரமைத்தல் (1.213 கி.மீ) பணிக்கு , மதிப்பீடு ரூ.37.50 இலட்சத்திற்கு 12.06.2014 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர்.எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ் | (-) 0.10 % -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்ததாரர் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார். பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.10 % -சதவீதம் குறைவானதாகவும் உள்ள திருவாளர். எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இயலுமா என, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/10031/2011-1 ன்படி கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 13.06.2014 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான (-)0.10 % சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர். எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று **திருவாளர். எம்.ஆர்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ்** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/10031/2011–1**

**21. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**22.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கம் (IUDM) **2013–14**ன் கீழ், மழைநீர் வடிகால் கட்டுதல் பணிகளை ரூ.**902.80** இலட்சத்தில் மேற்கொள்ள, தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களுக்கு பிரேரணைகள்அனுப்பப்பட்டது. அதில் ரூ.**739.80** இலட்சத்தில் புதிதாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.37191/2012/இ1, நாள் **19.09.2013** மற்றும் அரசாணை (டி) எண்.**492**, நாள் **19.09.2013**ல் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஏற்கனவே அனுப்பப்பட்ட பிரேரணைகளில் அனுமதி பெறப்பட்ட பணிகள் போக, மீதமுள்ள ஏனைய மழைநீர் வடிகால் மறுசீரமைத்தல் பணிகளை ரூ.163.**00** இலட்சத்தில் சுமார் **3.275** கி.மீ நீளத்தில், மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தீர்மான எண். **590** நாள் **31.07.2013**ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண்.44 பெரியார் நகர் ஆர்ச் சாலை வடக்கு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டுதல் (0.700 கி.மீ) பணிக்கு மதிப்பீடு - ரூ. 36.50 இலட்சத்திற்கு 12.06.2014 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் | (-)0.01 % -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்ததாரர் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார். பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.01%-சதவீதம் குறைவானதாகவும் உள்ள திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இயலுமா என, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/10031/2011-2 ன்படி கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 13.06.2014 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான (-)0.01 % சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று **திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன்** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/10031/2011–2**

**22. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**23.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கம் (IUDM) **2013–14**ன் கீழ், மழைநீர் வடிகால் கட்டுதல் பணிகளை ரூ.**902.80** இலட்சத்தில் மேற்கொள்ள, தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களுக்கு பிரேரணைகள்அனுப்பப்பட்டது. அதில் ரூ.**739.80** இலட்சத்தில் புதிதாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.37191/2012/இ1, நாள் **19.09.2013** மற்றும் அரசாணை (டி) எண்.**492**, நாள் **19.09.2013**ல் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஏற்கனவே அனுப்பப்பட்ட பிரேரணைகளில் அனுமதி பெறப்பட்ட பணிகள் போக, மீதமுள்ள ஏனைய மழைநீர் வடிகால் மறுசீரமைத்தல் பணிகளை ரூ.163.**00** இலட்சத்தில் சுமார் 3.275 கி.மீ நீளத்தில், மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண்.44 பெரியார் நகர் ஆர்ச் சாலை தெற்கு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் (0.750 கி.மீ) பணிக்கு மதிப்பீடு - ரூ. 38.00 இலட்சத்திற்கு 12.06.2014 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் | (-)0.01 % -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்ததாரர் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார். பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.01 % -சதவீதம் குறைவானதாகவும் உள்ள திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இயலுமா என, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/10031/2011-3 ன்படி கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 13.06.2014 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான (-) 0.01 % சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று **திருவாளர். தியானலிங்கா கன்ஸ்ட்ரக்சன்** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/10031/2011–3**

**23. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**24.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கம் (IUDM) **2013–14**ன் கீழ், மழைநீர் வடிகால் கட்டுதல் பணிகளை ரூ.**902.80** இலட்சத்தில் மேற்கொள்ள, தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களுக்கு பிரேரணைகள்அனுப்பப்பட்டது. அதில் ரூ.**739.80** இலட்சத்தில் புதிதாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.37191/2012/இ1, நாள் **19.09.2013** மற்றும் அரசாணை (டி) எண்.**492**, நாள் **19.09.2013**ல் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும்

ஏற்கனவே அனுப்பப்பட்ட பிரேரணைகளில் அனுமதி பெறப்பட்ட பணிகள் போக, மீதமுள்ள ஏனைய மழைநீர் வடிகால் மறுசீரமைத்தல் பணிகளை ரூ.163.**00** இலட்சத்தில் சுமார் 3.275 கி.மீ நீளத்தில், மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண்.51 ஈ.எம்.எம் சாலை பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் (0.435 கி.மீ) பணிக்கு மதிப்பீடு - ரூ. 39.00 இலட்சத்திற்கு 12.06.2014 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திரு. ஏ.முனியப்பன் | (-) 0.15 % -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |
| 2) திருவாளர். பி.டி.கே கன்ஸ்ட்ரக்சன் | (+) 3.15% -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.15 % -சதவீதம் குறைவானதாகவும் உள்ள திரு. ஏ.முனியப்பன் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இயலுமா என, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/10031/2011-4 ன்படி கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 13.06.2014 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான (-)0.15 % சதவீதத்தில் கோரியுள்ள திரு. ஏ.முனியப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று **திரு. ஏ.முனியப்பன்** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/10031/2011–4**

**24. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**25.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி இயக்கம் (IUDM) **2013–14**ன் கீழ், மழைநீர் வடிகால் கட்டுதல் பணிகளை ரூ.**902.80** இலட்சத்தில் மேற்கொள்ள, தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னைஅவர்களுக்கு பிரேரணைகள்அனுப்பப்பட்டது. அதில் ரூ.**739.80** இலட்சத்தில் புதிதாக மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்.37191/2012/இ1, நாள் **19.09.2013** மற்றும் அரசாணை (டி) எண்.**492**, நாள் **19.09.2013**ல் திருத்திய நிர்வாக அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் ஏற்கனவே அனுப்பப்பட்ட பிரேரணைகளில் அனுமதி பெறப்பட்ட பணிகள் போக, மீதமுள்ள ஏனைய மழைநீர் வடிகால் மறுசீரமைத்தல் பணிகளை ரூ.163.**00** இலட்சத்தில் சுமார் 3.275 கி.மீ நீளத்தில், மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தீர்மான எண். **590** நாள் 31.07.2013ல் மாமன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி வார்டு எண்.27 தெப்பக்குளம் வீதி மற்றும் ஈஸ்வரன் கோவில் வீதி பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் (0.176 கி.மீ) பணிக்கு

மதிப்பீடு - ரூ. 12.00 இலட்சத்திற்கு 12.06.2014 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். பி.டி.கே கன்ஸ்ட்ரக்சன் | (-)0.03 % -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |

வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்ததாரர் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார். பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.03 % -சதவீதம் குறைவானதாகவும் உள்ள திருவாளர். பி.டி.கே கன்ஸ்ட்ரக்சன் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இயலுமா என, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/10031/2011-5 ன்படி கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 13.06.2014 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான (-)0.03 % சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர். பி.டி.கே கன்ஸ்ட்ரக்சன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று திருவாளர். **பி.டி.கே கன்ஸ்ட்ரக்சன்** அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/10031/2011–5**

**25. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**26.** ஈரோடு மாநகராட்சி ஆணையாளருக்கு தனி குடியிருப்பு கட்டுவதற்கு மாமன்ற தீர்மான எண்.880 நாள் 25.02.2014 அன்று, ரூ.40.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மாநகராட்சிக்குட்பட்ட பெரியார் நகர் பகுதியில் ஏற்கனவே தண்ணீர் டேங்க் (OHT) கட்டப்பட்டுள்ள பகுதியில் உள்ள காலியிடத்தில் ஆணையாளர் குடியிருப்பு கட்டுதல் பணிக்கு 16.06.2014 அன்று E-Tendering முறையில் முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திருவாளர். எஸ்.வி.அன் கோ | (-) 0.02 % -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |
| 2) திருவாளர். கே.எம்.பழனிசாமி அன் கோ | (+) 1.27% -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.02% -சதவீதம் குறைவானதாகவும் உள்ள திருவாளர். எஸ்.வி.அன் கோ அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க , இவ்வலுவலக கடிதம் எண்.இ2/513/2014 ன்படி 16.06.2014 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 17.06.2014 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும்

குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான (-)0.02% சதவீதத்தில் கோரியுள்ள திருவாளர். எஸ்.வி.அன் கோ அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ2/513/2014**

**26. அனுமதி வழங்கப்பட்டது.**

**27.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்திரவின்படி ஏற்கனவே 10 எண்ணிக்கை கொண்ட அம்மா உணவகங்கள் திறம்பட நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் தற்பொழுது ஈரோடு மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் பொதுமக்கள் உபயோகத்திற்காக ஒரு புதிய அம்மா உணவகம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 02.06.2014 அன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3க்குட்பட்ட அரசு பொது மருத்துவமனை பகுதியில் அம்மா உணவக கட்டிடம் புதியதாக கட்டுதல் பணி ரூ.33.00 இலட்சத்திற்கு 04.06.2014 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு 16.06.2014 அன்று E-Tendering முறையில் முதன்முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) திரு ஏ.முனியப்பன் | (-) 0.78 % -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |
| 2) திரு வி.தாமோதரன் | (+) 0.74% -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-)0.78% -சதவீதம் குறைவானதாகவும் உள்ள திரு ஏ.முனியப்பன் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக கடிதம் எண்.இ1/2910/2014-1 ன்படி 16.06.2014 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 17.06.2014 தேதிய கடிதத்தில் வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான (-)0.78% சதவீதத்தில் கோரியுள்ள திரு ஏ.முனியப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று திரு ஏ.முனியப்பன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/2910/2014–1**

**27. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**28.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 3-ன் சூரம்பட்டி பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அக்ரஹாரம் பகுதியில் உள்ள தலைமை நீரேற்று நிலையம் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட தலைமை நீரேற்று நிலையத்தில் உயர் அழுத்த மின் இணைப்பு (H.T Sc No: 35) மூலம் மின் மோட்டார்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

மேலும் மேற்கண்ட உயர் அழுத்த மின் இணைப்பு டிரான்ஸ்பார்மர்கள், பேனல் போர்டு, மின் மோட்டார்கள் உள்ளிட்ட மின் அமைப்புகள் 25-11-2013 தேதியன்று மின் ஆய்வாளர் ஈரோடு (தெற்கு) அவர்களால் மின்ஆய்வு செய்யப்பட்டு அவர்களின் கடிதம் எண் EDE 37/ EI / EDE (s) / R30 / 2013, நாள் 2-12-2013 மற்றும் மின் ஆய்வாளர்- ஈரோடு (தெற்கு) அவர்களின் கடிதம் எண் EDE 37/ மி.ஆ (தெ) / 2014, நாள் 2-04-2014 ஆகிய கடிதங்களின் வாயிலாக மின் அமைப்புகள் சமந்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து அறிக்கை அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது சூரம்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் 150KVA டிரான்ஸ்பார்மர்கள் 2 எண்ணிக்கை பொருத்தப்பட்டு உள்ளது. பம்புசெட்டுகளின் திறன் அபிவிருத்தி பணியின் காரணமாக மின் பளு 235KVA ஆக உள்ளது. அதனால் 2 டிரான்ஸ்பார்மர்களுமே ஒரே நேரத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு இயக்கப்படும்போதுதான் தேவையான அணைத்து மின்சார பம்புசெட்டுகளும் இயக்க இயலும். மேலும் மேற்கண்ட டிரான்ஸ்பார்மர்களில் ஒன்று பழுதடைந்தாலும் குடிநீர் விநியோகம் பாதிக்கப்படும் சூழ்நிலை உள்ளது. எனவே தற்பொழுது தேசிய நதிநீர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிறுவப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படாத நிலையில் ஈரோடு மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட காரைவாய்க்கால் பகுதியில் உள்ள கழிவு நீரேற்று நிலையத்தில் ஏற்கனவே பழுதடைந்து இயங்காத நிலையில் இருக்கும் 3 எண்ணிக்கை 250KVA டிரான்ஸ்பார்மர்களில் 2 எண்ணிக்கை டிரான்ஸ்பார்மர்களை பழுது நீக்கம் செய்து மேற்கண்ட 2 எண்ணிக்கை டிரான்ஸ்பார்மர்களுக்கு பதிலாக பொருத்தலாம். அவ்வாறு பொருத்தும் போது ஒரு எண்ணிக்கை 250KVA டிரான்ஸ்பார்மரை மட்டும் ஒரு சமயத்தில் இயக்கினால் போதுமானது. ஒரு 250KVA டிரான்ஸ்பார்மரை மாற்று கருவியாக ( Stand by ) உபயோகப்படுத்த இயலும். இதனால் குடிநீர் வழங்கும் பணியினை எவ்வித பாதிப்பு இல்லாமல் செயல்படுத்த இயலும்.

எனவே காரைவாய்க்கால் பகுதியில் பயன்பாடில்லாமல் உள்ள 6 pole transformer structure, 3 எண்ணிக்கை டிரான்ஸ்பார்மர்கள் மற்றும் அது தொடர்புடைய கேபிள்களை கழற்றவும், அவற்றில் 2 எண்ணிக்கை 250KVA டிரான்ஸ்பார்மர்களை பழுது நீக்கம் செய்து சூரம்பட்டி தலைமை நீரேற்று நிலையத்தில் பொருத்தி மற்றும் மின் ஆய்வாளர் அறிக்கையின்படி மின்சார குறைகளை நிவர்த்தி செய்யவும் தேவையான பணிகளை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ 12.70 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்.
2. குடிநீர் பணியின் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கெண்டதையும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ2/1810/2014**

**28. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**29.** ஈரோடு ஆட்சித்தலைவர்/ தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.1255/2012/அ3 நாள் 14.02.2014ன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2012–2013ன்கீழ் ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2 வார்டு எண்.29 காந்திபுரம்.1 குடிசைப்பகுதியில் புதியதாக பொதுக்கழிப்பிடம் கட்டுதல் பணிக்கு ரூ.10,00,000/–க்கு 28.02.2014 தேதியன்று மேற்படி பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இப்பணிக்கான டேவணித்தொகையை ஒப்பந்ததாரர் பணமாக மாநகராட்சி மண்டலம்–2 அலுவலகத்தில் செலுத்தியுள்ளார். எனவே பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் பெறப்பட்ட விபரம் பின்வருமாறு

மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன்ஸ் 0.04 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு.

எனவே பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது மதிப்பீட்டு விலையைவிட 0.04 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. திட்டப்பணியாக இருப்பதால் பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் ராசி கன்ஸ்ட்ரக்சன்ஸ் (0.04 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**(மண்டலம்.2)**

**29. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**30.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் 1ல் வார்டு எண்.11 பவானி மெயின்ரோடு கதவு எண்கள்.192/50ஜி மற்றும் 192/50டி ஆகிய கட்டிடத்தில் நடைபெறும் தனியார் வாரச்சந்தைக்கு ஆண்டு வருமானம் ரூ.55,60,360/ல் உரிமக்கட்டணமாக 25 சதவீதம் ரூ.13,90,090/–ஐ 2013–2014ஆம் ஆண்டிற்கு கட்டணம் நிர்ணயம் செய்து மாமன்றம் தீர்மானம் எண்.592 நாள் 31.03.2013ன்படி அனுமதிக்கப்பட்டது.

தனியார் வாரச்சந்தை உரிமையாளர் தனது 28.09.2013ஆம் தேதிய கடிதத்தில் ஈரோடு மாநகராட்சியால் மதிப்பீடு செய்யப்பட்ட கட்டணம் அதிகம் என்றும், மறு ஆய்வு செய்து கட்டணம் நிர்ணயம் செய்து உத்திரவு வழங்கக் கோரியதை, மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டதில், மாமன்றம் தனது 30.12.2013ஆம் தேதிய கூட்டமர்வில் தீர்மான எண்.742ல் மேற்படி தனியார் வாரச்சந்தைக்கு நிர்ணயம் செய்யப்பட்ட உரிமத் தொகை கட்டணம் அதிகம் எனத் தெரிவித்துள்ளதால் கடைகளின் எண்ணிக்கையை மறு ஆய்வு செய்து மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் கொண்டுவர தீர்மானிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, ஆணையாளர் ஈரோடு மாநகராட்சி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.அ1/1136/2013 நாள் 28.02.2014ஆம் தேதிய உத்திரவின்படி இம்மாநகராட்சி பணியாளர்களால் 03.03.14ஆம் தேதியன்று மறு நேராய்வு செய்து கீழ்க்கண்டுள்ளவாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மொத்தக் கடைகள் விபரம் | ஆண்டு வருமானம் தொகை ரூ. | உரிமத் தொகை 25 சதவீதம் ரூ. |
|---|---|---|---|
| 1. | 1420 | 49,41,560/ | 12,35,390/ |

மேற்படி தனியார் சந்தைக்கு ஆண்டு வருமானம் ரூ.49,41,560/– வசூலிக்கப்படுவதாக மறு ஆய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் தனியார் வாரச்சந்தையின் ஆண்டு வருவாயில் மாநகராட்சி சட்டவிதிகளின்படி 25 சதவீதம் உரிமத் தொகையாக செலுத்தப்பட வேண்டும்.

ஆகவே மேற்கண்ட விபரப்படி ஆண்டு வருவாயில் 25 சதவீதத் தொகை ரூ.12,35,390/–ஐ 2013/2014ஆம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யவும், உரிமம் வழங்கவும் மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

மாமன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அ1/1136/13

**30. விழாக்காலம் அல்லாத நாட்களில் கடைகளின் எண்ணிக்கையை மறு ஆய்வு செய்து மீண்டும் பொருள் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டது.**

**31.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட சென்னிமலை சாலையில் ஈரோடு(நெ) நபார்டு மற்றும் கிராம சாலைகள் உட்கோட்டம், ஈரோடு நபார்டு மற்றும் கிராம சாலைகள் பிரிவுக்குட்பட்ட ஈரோடு சென்னிமலை சாலையிலிருந்து பெரிய சடையம்பாளையம் செல்லும் சாலை கி.மீ0/2ல் உள்ள இருப்பு கடவு எண்.124க்கு பதிலாக ஈரோடு மற்றும் தொட்டிபாளையம் இரயில் நிலையங்களுக்கு இடையில் இரயில்வே கி.மீ 393/44–48ல் (சாஸ்திரி நகர்) சாலை மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்று வருவதை தொடர்ந்து சென்னிமலை சாலையில் ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் நீருந்து குழாய், காசிபாளையம் நீருந்து நிலையத்திற்கு செல்லும் நீருந்து குழாய் மற்றும் பகிர்மான குழாய், சாஸ்திரி நகர் குடிநீர் பகிர்மான குழாய் ஆகியவற்றை மாற்றி அமைத்து மேம்பாலம் கட்டுவதற்கு இடையூறு ஏற்படா வண்ணம் ஆவண செய்யுமாறு கோட்டப்பொறியர் (நெ) நபார்டு மற்றும் கிராம சாலைகள் ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.451/2011–2/இவஅ–2 நாள் 13.02.14ஆம் தேதியில் தெரிவித்ததை தொடர்ந்து மேற்படி குடிநீர் குழாய்களை மாற்றியமைக்க தேவையான மதிப்பீடு தொகை ரூ.40.00 இலட்சத்தை ஈரோடு மாநகராட்சிக்கு செலுத்த கோரியதில் மேற்படி மதிப்பீடு தெகை ரூ.40.00 இலட்சத்திற்கான வங்கி வரைவோலையை கோட்டப்பொறியர் (நெ) நபார்டு மற்றும் கிராம சாலைகள் ஈரோடு அவர்கள் கடித எண். ந.க.எண்.278/2014/அ–2 நாள் 04.04.14ம் தேதியில் ஈரோடு மாநகராட்சிக்கு செலுத்தியுள்ளார்கள் எனவே சென்னிமலை சாலையில் ஈரோடு மாநகராட்சிக்கு சொந்தமான முத்தம்பாளையம் வீட்டு வசதிவாரியம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் நீருந்து குழாய், காசிபாளையம் நீருந்து நிலையத்திற்கு செல்லும் நீருந்து குழாய் மற்றும் பகிர்மான குழாய், சாஸ்திரி நகர் குடிநீர் பகிர்மான குழாய் ஆகியவற்றை மாற்றியமைக்க தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.40.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மதிப்பீட்டிற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தை கோட்டப்பொறியர்(நெ) நபார்டு மற்றும் கிராம சாலைகள் ஈரோடு அவர்களால் ஈரோடு மாநகராட்சிக்கு செலுத்தப்பட்ட தொகை ரூ.40.00 இலட்சத்தில் ஈடு செய்து கொள்ளலாம்.
3. இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ2/513/14

**31. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**32.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் 3ல் உள்ள பெரியார் நகர் " ஈ " பிளாக் பகுதி சமுதாய கூடத்திற்கு முதல்தளம் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்து கொள்ள மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்திற்கு ஏற்கனவே மாமன்றத் தீர்மான எண்.881 நாள் 25.02.2014ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது அக்கட்டிடத்தின் தரைதளத்தை சுற்றி பணிகள் மேற்கொள்ளவும் கட்டிடத்தின் உட்புறம் கூடுதல் பணிகள் மற்றும் மாடிப்படிகள் அமைக்கவும் அவசியமாக உள்ளது. எனவே, இப்பணிகளை மேற்கொள்ள திருத்திய மதிப்பீடு ரூ.25.00 இலட்சத்திற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மதிப்பிற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் அனுமதிக்கலாம்.

இ2/1402/14

**32. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**33.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்திரவின்படி ஏற்கனவே 10 எண்ணிக்கை கொண்ட அம்மா உணவகங்கள் திறம்பட நல்லமுறையில் செயல்பட்டு வருகின்றது. மேலும் தற்போது ஈரோடு மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் பொதுமக்கள் உபயோகத்திற்காக ஒரு புதிய அம்மா உணவகம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 02.06.14ம் தேதியன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி அரசு பொது மருத்துவமனையில் புதிய கட்டிடம் கட்டவும் மற்றும் சமையல் உபகரணங்கள் வாங்கவும் கீழ்காணும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட அரசு மருத்துவமனைப்பகுதியில் அம்மா உணவக கட்டிடம் புதியதாக கட்டுதல். | ரூ.33.00 இலட்சம் |
| 2. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட அரசு மருத்துவமனைப் பகுதியில் அம்மா உணவக கட்டிடத்திற்கு சமையல் செய்வதற்கு தேவையான பாத்திரங்கள் சமையல் மின்சாதனப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்குதல். | ரூ. 10.00 இலட்சம் |
| 3. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட அரசு மருத்துவமனைப் பகுதியில் அம்மா உணவக கட்டிடத்திற்கு உணவு பரிமாறும் பாத்திரங்கள் தட்டு மற்றும் இதர பொருட்கள் வாங்குதல். | ரூ.2.00 இலட்சம் |
| 4. | ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3க்குட்பட்ட அரசு மருத்துவமனைப்பகுதியில் அம்மா உணவக கட்டிடத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் (250 லிட்டர் கொள்ளளவு) கலன் அமைத்தல் | ரூ.1.90 இலட்சம் |

மேற்கண்ட இடத்தில் அம்மா உணவகம் அமைக்க தயார் செய்யப்பட்டுள்ள மேற்படி மதிப்பீடுகளுக்கு நிர்வாக அனுமதியும் இச்செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. ஈரோடு மாநகராட்சி பகுதியில் 1 எண்ணம் அம்மா உணவகம் அரசு பொது மருத்துவமனயில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு உடனடியாக திறக்கப்படவேண்டியதன் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதையும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/2910/14**

**33. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**34.** மாமன்றம் தனது தீர்மானம் எண்.255 நாள் 08.11.12ன்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம்—2க்குட்பட்ட வார்டு எண்.20 பெரியவலசு நடுநிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறைகள் கட்டிடம் கட்டுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.23,00,000/—க்கு இப்பணிக்கு மூன்றாம் அழைப்பாக 30.12.2013ந் தேதி இ—டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் பணிக்கான டேவணித்தொகையை பணமாக மாநகராட்சி அலுவலக கருவூலகத்தில் செலுத்தியுள்ளார். எனவே பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் வரப்பட்ட விபரம் பின்வருமாறு—

திரு. ஜி. கிருஷ்ணன் — 0.19 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு.

எனவே பெறப்பட்ட ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும்போது மதிப்பீட்டு விலையைவிட 0.19 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு. ஜி. கிருஷ்ணன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. ஜி. கிருஷ்ணன் (0.19 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட குறைவு) அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/2409/13**

**34. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**35.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்—3க்குட்பட்ட சென்னிமலை சாலையில் முத்தம்பாளையம் வீட்டு வசதி வாரியம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு செல்லும் நீருந்து குழாய், காசிபாளையம் நீருந்துக்கு செல்லும் நீருந்து குழாய் மற்றும் சாஸ்திரி நகர் குடிநீர் பகிர்மான குழாய்களை மாற்றியமைத்தல் பணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதியில் ரூ.40,00,000/—க்கு நிர்வாக அனுமதி வழங்கியதை தொடர்ந்து மேற்படி பணிக்கு முதல் முறையாக 04.06.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1. திரு. மகாசாமி சக்திவேல் — 8.82 % அதிகம்
2. திரு. ஏ. முனியப்பன் — 4.91 % அதிகம்

மேற்படி ஒப்பந்ததாரர்கள் 1 சதவீதம் டேவணித் தொகையை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார்கள்.

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.91% அதிகமானதாகவும் உள்ள ஒப்பந்ததாரர் திரு. ஏ. முனியப்பன் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.இ2/513/2014 நாள் 04.06.2014ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 06.06.2014 தேதிய கடிதத்தில், மேலும் விலையை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே, வரப்பற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.91 சதவீதம் அதிகமான விலைவிகிதம் உள்ள ஒப்பந்ததாரர் திரு. ஏ. முனியப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. சென்னிமலை சாலையில் ஈரோடு (நெ) நபார்டு மற்றும் கிராம சாலைகள் துறை மூலம் மேம்பாலம் கட்டும் பணிக்கு இடையூறாக உள்ள நீருந்து குழாய்களை மாற்றியமைக்க வேண்டியதின் அவசர அவசியம் கருதி, இவ்வேலைக்கு முதன்முறையாக வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகையை விட (+) 4.91 சதவீதம் அதிமான விலை விகிதம் உள்ள ஒப்பந்ததாரர் திரு. ஏ. முனியப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பதற்கு, மாநகராட்சி கையேடு பகுதி–2, பத்தி எண்.6.5.5, 6.5.6, 6.5.7 மற்றும் பொறியர் கையேடு பக்கம்–9, பத்தி எண்.2.7.2 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி மாமன்றத்திற்கு வழங்கப்பட்ட அதிகார வரம்பிற்குட்பட்டு ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு மேல் இருப்பதாலும் மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/513/14**

**35. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**36.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3ல் வார்டு எண்.34க்குட்பட்ட ரங்கம்பாளையம் நெசவாளர் காலனிக்குச் செல்லும் சாலையில் அமைந்துள்ள சிறுபாலத்தின் கிழக்குபுற தாங்குசுவர் கடந்த பருவமழை காலத்தில் பெய்த கனமழையின் காரணமாக உடைந்து மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இதனால் அச்சாலை துண்டிக்கப்பட்டு போக்குவரத்து பாதிக்கப்பட்டு அப்பகுதி மக்களுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தியது. எனவே சிறுபாலத்தின் தாங்கு சுவரை உடனடியாக சீரமைக்கும் பொருட்டு இப்பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு–15ன்கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு–

| | | |
|---|---|---|
| 1. | எஸ். கண்ணன், ஈரோடு | ரூ.7204/க.மீ (அனைத்து பணிகள்) |
| 2. | மெசர்ஸ் சரவணா அண்டு கோ, ஈரோடு | ரூ.7220/க.மீ (அனைத்து பணிகள்) |
| 3. | மெசர்ஸ் அமுதா கன்ஸ்ட்ரக்ஷன், ஈரோடு | ரூ.7250/க.மீ (அனைத்து பணிகள்) |

மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் கொண்ட விலைப்புள்ளியை வழங்கிய திரு. எஸ். கண்ணன் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான தொகை ரூ.47660/–ஐ மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கியதையும் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ1/2832/13

**36. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**37.** இம்மாநகாட்சிப் பள்ளிகளில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்வுகளில் 2013–2014ம் ஆண்டில் முதல் மூன்று மதிப்பெண்கள் பெற்ற மாணவ மாணவிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும் என 2014–2015ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் உரையில் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, மேற்படி பரிசுகளை இந்த ஆண்டுக்கு வருகிற 15.08.2014ந் தேதி இம்மாநகராட்சியில் கொண்டாடப்படும் சுதந்திர தினவிழா அன்று வழங்கலாம்.

மேலும் இம்மாநகராட்சிப் பள்ளிகளில் 2012–2013ம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பு தேர்வில் முதல் மூன்று மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு முதல் பரிசாக தலா ரூ.5000/–ம், இரண்டாம் பரிசாக தலா ரூ.3000/–ம், மூன்றாம் பரிசாக தலா ரூ.2000/–ம் மற்றும் சான்றிதழ்கள் ஆகியவைகள் 26.01.14ந் தேதி இம்மாநகராட்சியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவில் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே இந்த ஆண்டுக்கு வருகிற 15.08.14ந் தேதியன்று இம்மாநகராட்சியில் கொண்டாடப்படும் சுதந்திர தினவிழா நிகழ்ச்சி அன்று 2013–14ம் ஆண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பனிரெண்டாம் வகுப்பில் முதல் மூன்று மதிப்பெண் பெறும் மாணவர்களுக்கு கடந்த ஆண்டைவிட பரிசுத்தொகை கூடுதலாக பத்தாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறுபவர்க்கு ரூ.10,000/–ம், இரண்டாம் மதிப்பெண் பெறுபவர்க்கு ரூ.6000/–ம், மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெறுபவர்க்கு ரூ.4000/–ம் , மேலும் பனிரெண்டாம் வகுப்பில் முதல் மதிப்பெண் பெறுபவர்க்கு ரூ.20,000/–ம், இரண்டாம் மதிப்பெண் பெறுபவர்க்கு ரூ.18,000/–ம், மற்றும் மூன்றாம் மதிப்பெண் பெறுபவர்க்கு ரூ.15,000/–ம் வீதம் பரிசுத் தொகைகள் ஆக மொத்தம் ரூ.73,000/–ஐ வழங்கவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

சி2/367/14

**37. அனுமதி வழங்கப்பட்டது.**

**38.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2013-14 (கிழக்கு) நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர்/தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, ஈரோடு அவர்களின் கடிதம் ந.க.எண்.502/2013/அ3 நாள் 25.02.2014-ல் அனுமதி வழங்கியுள்ளார்கள். அதன்படி வார்டு எண்.20 அய்யனாரப்பன் கோவில் வீதியில் உள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கி வரும் (அங்கன்வாடி மையம் எண்.39, 60, 61, 62) பழைய கட்டிடத்தை இடித்து விட்டு புதியதாக அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டுதல் பணிக்கு, மதிப்பீடு ரூ.24.00 இலட்சத்திற்கு 30.05.2014 அன்று E-Tendering முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை எடுத்து கொள்ளப்பட்ட மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு.

| | |
|---|---|
| 1) ஏ.முனியப்பன் | (-) 0.75% -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட குறைவு |
| 2) வி.தாமோதரன் | (+) 2.87% -சதவீதம் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டை விட அதிகம் |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்ததாரர்களும் ஒப்பந்த மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித்தொகை வழங்கியுள்ளார்கள். பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவானதாகவும், எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டுத் தொகையை விட (-) 0.75% -சதவீதம் குறைவானதாகவும் உள்ள ஏ.முனியப்பன் அவர்களை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க, இவ்வலுவலக கடிதம் எண்.இ1/367/2014 ன்படி கேட்பு அறிவிப்பு 30.05.2014 அன்று கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 04.06.2014 தேதிய கடிதத்தில், வேலை ஆட்களின் கூலி மற்றும் கட்டுமான பொருட்களின் விலை உயர்ந்துள்ளதால் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவாகவும் மற்றும் எடுத்துக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டினை விட குறைவான **(-) 0.75%** சதவீதத்தில் கோரியுள்ள ஏ.முனியப்பன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு-**

1) மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஏ.முனியப்பன் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்

**இ1/367/14**

**38. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**39.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2ற்குட்பட்ட ஆர்.கே.வி. ரோட்டில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான வணிக வளாகம் (லூம் வேல்டு) முதல் தளத்தில் உள்ள கடை எண்.10ஐ கடந்த 12.06.2014ஆம் தேதியில் பொது ஏலம் விடப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு ஏலம் கோரியுள்ளார்கள்.

| வ. எண். | ஏலதாரர் விபரம் | கடை எண். | அரசு மதிப்பு ரூ. | உச்ச ஏலக்கேள்வித் தொகை ரூ. (மாதம் ஒன்றுக்கு) |
|---|---|---|---|---|
| 1. | திரு. த. குணசேகரன் த/பெ தங்கவேல் | 10 | 6550/– | 7800/– |

மேற்காணும் கடைக்கு கேட்கப்பட்டுள்ள உச்ச ஏலக்கேள்வித் தொகையானது, மாநகாட்சி நிர்ணயம் செய்துள்ள அரசு மதிப்பை விட கூடுதலாகும். ஆகவே மேற்படி ஏலக்கேள்வியினை ஏற்று மேற்படி கடை எண்.10ஐ ஒப்படைக்கும் நாள் முதல் 31.03.2017 வரை ஒதுக்கீடு செய்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/2543/14**

**39. ஆர்.கே.வி ரோட்டில் உள்ள வணிக வளாக முதல் தள கடை எண்.10க்கு ஏலம் கோரியுள்ள திரு. த. குணசேகரன் அவர்கள் கோரியுள்ள ஏலக்கேள்வியினை ஏற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது.**

**40.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் திட்டப்பணிகளின் நிலை பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகத்தின் நிலை ஆகியவற்றை உடனுக்குடன் புகைப்படத்துடன் (whatsapp) தெரிவிக்கப்பட வேண்டும் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்டங்களில் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெறும் திட்டப்பணிகள், பொதுசுகாதாரம் மற்றும் குடிநீர் விநியோகத்தின் விபரங்களை புகைப்படத்துடன் அனுப்ப இணையதள இணைப்பு வழங்கப்பட வேண்டியுள்ளது.

எனவே இம்மாநகராட்சியில் ஆணையர், கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர்கள், மாநகர நல அலுவலர், உதவிப் பொறியாளர்கள், இளம் பொறியாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் குழாய் பொருத்துனர்களுக்கு தற்போது அலுவலக பயன்பாட்டில் உள்ள BSNL CUG இணைப்பில் கூடுதலாக இணையதள இணைப்பு கீழ்கண்ட கட்டண வீதங்களில் Net connection வழங்க வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | ஆணையர், கண்காணிப்பு பொறியாளர், செயற்பொறியாளர்கள், மாநகர நல அலுவலர், உதவி ஆணையாளர்கள் - 15 எண்ணிக்கை | Tariff plan ஒரு இணைப்பிற்கு ரூ.225/மாதம் (2GB free) +12.36% வரி |
| 2 | உதவிப் பொறியாளர்கள், இளம் பொறியாளர்கள், துப்புரவு ஆய்வாளர்கள் மற்றும் குழாய் பொருத்துனர்கள் - 50 எண்ணிக்கை | ஒரு இணைப்பிற்கு ரூ.125/மாதம் (1GB free) +12.36% வரி |

மேற்கண்டவாறான திட்டத்தில் அலுவலர்களுக்கு 15 இணைப்புகள் ஒரு இணைப்பிற்கு ரூ.225/மாதம் (2GB free) +12.36% வரி என்ற plan-லும் பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 50 இணைப்புகள் ஒரு இணைப்பிற்கு ரூ.125/மாதம் (1GB free) +12.36% வரி என்ற plan-லும் தற்போது பயன்பாட்டில் உள்ள CUG இணைப்புகளிலேயே மேற்படி Net connection பெற்றுக் கொள்ளவும் மேலும் மேற்படி Net connection-களுக்கு கட்டணம் மாதம் ஒன்றிற்கு ரூ.10815/-ஐ தொடர்ச்சியாக செலுத்தவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. மேலும் மேற்படி Plan-களில் BSNL நிறுவனத்தால் ஏதேனும் மாற்றம் செய்யும் பட்சத்தில் அவ்வாறு மாற்றம் செய்யப்படும் திட்டத்தில் (Plan) மேற்படி இணைப்புகளையும் மாற்றம் செய்து கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. தற்போது நடைபெற்று வரும் திட்டப்பணிகளின் விபரங்களை உடனுக்குடன் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் உயர் அலுவலர்களுக்கு விபரங்கள் இணைய தள இணைப்பு மூலம் அனுப்ப வேண்டியுள்ளதால் இப்பணியின் அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை மேற்கொண்டதற்கும் ஒப்புதல் வழங்கலாம்.

**இ2/977/12**

**40. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**41.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–3,4 பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும் மேல்நிலைத் தொட்டிக்கு பம்பிங் செய்யும் 500 எம்.எம். பிரதான குழாய் வார்டு எண்.51 சென்னிமலை ரோடு டீசல் செட் அருகில் உடைப்பு ஏற்பட்டு பம்பிங் செய்ய இயலாமல் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பழுதினை சரி செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு–15ன் கீழ் அனுமதி பெற்று 26.05.14ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் விபரம் வருமாறு

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | திரு. வி. தாமோதரன், ஈரோடு | ரூ. 1,97,519/– |
| 2. | திரு. ஏ. முனியப்பன், ஈரோடு | ரூ. 2,04,736/– |
| 3. | மெசர்ஸ் அசோக்ராஜா அண்டு கோ, ஈரோடு | ரூ. 1,98,478/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி ரூ.1,97,519/—க்கு கொடுத்துள்ள திரு. வி. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பழுதுகளை சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்து. குடிநீர் விநியோகப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி குழாய் பழுதுகளை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு—15ன் கீழ் சரி செய்துள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**இ2/708/14**

**41. பதிவு செய்யப்பட்டது.**

**42.** இம்மாநகராட்சியில் உட்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் திட்டம் மூலம் 2013-14-ம் ஆண்டில் கீழ்கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதற்கு ரூ.164.00 இலட்சத்திற்கு திட்டப் பிரேரணைகள் அனுப்பி வைக்கப்பட்டது. இதில் தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 02.06.2014-ம் தேதிய மின்னஞ்சல் மூலம் மேற்படி திட்டப்பணிகளுக்கு ரூ.164.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். மேற்படி திட்டத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள பணிகள் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | மண்டலம் -1 அலுவலகக் கட்டிடத்திற்கு முதல் தளம் மற்றும் கூடுதல் அபிவிருத்தி செய்தல் பணி | 64.00 |
| 2 | வார்டு எண்.37 காசிபாளையம் மலைக்கோயில் செல்லும் வழியில் உயர்மட்ட RCC பாலம் மற்றும் வார்டு எண்.50 கட்டபொம்மன் வீதியில் ஓடையின் குறுக்கே உயர்மட்ட RCC பாலம் கட்டுதல் பணி | 100.00 |
| | **மொத்தம்** | **164.00** |

மேற்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ.164.00 இலட்சத்திற்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. இப்பணிகளை உட்கட்டமைப்பு மற்றும் இடைவெளி நிரப்புதல் திட்டம் 2013-14ல் அரசுநிதி ஒதுக்கீடின் கீழ் பணிகள் மேற்கொள்வதற்கு மாமன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

1. மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி பணி திட்டப்பணியாக இருப்பதால் பணிகளை உடன் செய்து முடிக்க வேண்டியதன் அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர அலுவலக நடவடிக்கைகள் மேற்கொண்டமைக்கும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/51/12**

**42. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**43.** மக்களவைத் தேர்தல் 2014—ல் ஈரோடு பாராளுமன்ற தொகுதிக்கான தேர்தல் பணிகளுக்கு காவலர்கள் மற்றும் வாகனங்கள் பகிர்ந்தளிக்கும் பணிகள் வ.உ.சி பூங்காவில் நடைபெற உள்ளதால் அதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து வழங்கக் கேட்டு மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர் அவர்களின் 18.04.14ந் தேதிய கடிதத்தில் கோரப்பட்டது. எனவே மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு—15ன் கீழ் இப்பணியை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து இப்பணிக்கு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு—

1. ஏ. செல்வராஜ், ஒப்பந்ததாரர்
2. எஸ்.எம்.எஸ் கணோ ஸ்டோர்ஸ்
3. ஸ்ரீஹரி பந்தல் ஸ்டோர்

சட்டம் பிரிவு—15ல் மேற்கொண்டதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ளப்பட்டு அதற்கான தொகை ரூ. 69,400/—ஐ மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கியதையும் சட்டம் பிரிவு—15ன் பதிவேடு பக்கம் 48ல் பதிவு செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/715/14**

**43. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**44.** மாநில தேர்தல் ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் எண்.822/2014—6 நாள் 14.04.14ல் இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்திரவின்படி ஒவ்வொரு பாராளுமன்ற தொகுதிகளிலும் குறைந்த பட்சம் ஒரு மாதிரி வாக்குச்சாவடி அமைக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால் அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர்களும் அவரவர் மாவட்டத்தில் ஒரு மாதிரி வாக்குச்சாவடி உடனடியாக அமைத்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டி எனத் தெரிவிக்கப்பட்டது. அதற்கிணங்க மாவட்ட தேர்தல் அலுவலரின் உத்தரவின்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம்—2ல் வார்டு எண்.25க்குட்பட்ட இடையன்காட்டு வலசு மாநகராட்சி மேல்நிலைப்பள்ளியிலுள்ள வாக்குச்சாவடி எண்.95/165 என்ற வாக்குச் சாவடியில் மேற்படி மாதிரி வாக்குச்சாவடி அமைக்க தேர்வு செய்யப்பட்டது. மேற்படி பணியின் அவசர அவசியத்தை கருதி மேற்படி பணியை ஈரோடு மாநகராட்சி சட்டம் பிரிவு—15ன் கீழ் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு இப்பணிக்காக பெறப்பட்ட விலைப்புள்ளிகள் விபரம் கீழ்வருமாறு—

1. ஏ. செல்வராஜ், ஒப்பந்ததாரர்
2. ஸ்ரீ முருகன் கல்யாண் ஸ்டோர்
3. எஸ்.எம்.எஸ். கணேசா ஸ்டோர்ஸ்

இப்பணி சட்டம் பிரிவு—15ன்கீழ் மேற்கொள்ளப்படுவதால் பெறப்பட்ட மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய திரு. ஏ. செல்வராஜ் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி வேலை செய்து முடிக்கப்பட்டு அதற்கான பட்டியல் தொகை ரூ. 59,279/—ஐ வழங்கியதை சட்டம் பிரிவு—15ன் பதிவேடு பக்கம் 48ல் பதிவு செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/813/1—2014/மண்டலம்—2**

**44. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**45.** ஈரோடு (கிழக்கு) மற்றும் (மேற்கு) பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளிலும் தளவாடங்கள் மின் இணைப்பு மற்றும் மின் விளக்கு, தற்காலிக பந்தல், தளவாடங்கள் ஆகியவற்றை செய்ய ஏற்படும் செலவினங்களை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.999/2014/கே1 நாள் 20.04.2014ல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி பாராளுமன்றத் தேர்தலுக்கு ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதியில் மண்டலம்—4க்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் மின்இணைப்பு, மின்விளக்குகள், தற்காலிக பந்தல்கள் தளவாடங்கள் மற்றும் குடிநீர் வசதிகள்

செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சியின் சட்டம் பிரிவு–15ன் கீழ் மேற்படி பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு–

1. வி. தாமோதரன், ஒப்பந்ததாரர், ஈரோடு
2. டேவிட் வீடியோஸ், ஈரோடு
3. சன் கேமர், ஈரோடு

இப்பணி மாநகராட்சி சட்டம் பிரிவு–15ன் கீழ் மேற்கொள்வதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. வி. தாமோதரன், ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ.1.50 இலட்சத்தை மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. இதனை சட்டம் பிரிவு–15ன் பதிவேடு பக்கம் 47ல் பதிவு செய்து மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

சி1/416–1/மண்.4

**45. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**46.** ஈரோடு (கிழக்கு) மற்றும் (மேற்கு) பாராளுமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடிகளிலும் தளவாடங்கள் மின் இணைப்பு மற்றும் மின் விளக்கு, தற்காலிக பந்தல், தளவாடங்கள் ஆகியவற்றை செய்ய ஏற்படும் செலவினங்களை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.999/2014/கே1 நாள் 20.04.2014ல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி பாராளுமன்றத் தேர்தலுக்கு ஈரோடுகிழக்கு சட்டமன்ற தொகுதியில் மண்டலம்–4க்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் மின்இணைப்பு, மின்விளக்குகள், தற்காலிக பந்தல்கள் தளவாடங்கள் மற்றும் குடிநீர் வசதிகள் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேற்படி பணிகளின் அவசர அவசியம் கருதி ஈரோடு மாநகராட்சியின் சட்டம் பிரிவு–15ன் கீழ் மேற்படி பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம் கீழ்வருமாறு–

1. வி. தாமோதரன், ஒப்பந்ததாரர், ஈரோடு
2. டேவிட் வீடியோஸ், ஈரோடு
3. சன் கேமர், ஈரோடு

இப்பணி மாநகராட்சி சட்டம் பிரிவு–15ன் கீழ் மேற்கொள்வதால் மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைவிகிதம் வழங்கிய திரு. வி. தாமோதரன், ஒப்பந்ததாரர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று மேற்படி பணிகள் செய்து முடிக்கப்பட்டு அதற்கான தொகை ரூ.54,000/–ஐ மேற்படி ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டது. இதனை சட்டம் பிரிவு–15ன் பதிவேடு பக்கம் 47ல் பதிவு செய்து மாமன்றத்தின் பார்வைகும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ1/8736–1/14

**46. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**47.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4க்குட்பட்ட வெண்டிபாளைம் தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து கொல்லம்பாளையம் நீருந்து நிலையத்திற்கு பம்பிங் செய்யும் 10 இன்ச் ஏ.சி. பிரதான குழாய் வெண்டிபாளையம் கல்யாணசுந்தரம் வீதியில் உடைப்பு ஏற்பட்டு பம்பிங் செய்ய இயலாமல் குடிநீர் விநியோகம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பழுதினை சரி செய்ய வேண்டியதன் அவசர அவசியம் கருதி மாநகராட்சிகள் சட்டம் பிரிவு–15ன் கீழ் அனுமதி பெற்று 07.05.2014ல் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெறப்பட்டதின் விபரம் வருமாறு–

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | மொத்த செலவினம் |
|---|---|---|
| 1. | திரு. வி. தாமோதரன், ஈரோடு | ரூ.78,535/– |
| 2. | திரு. ஏ. முனியப்பன், ஈரோடு | ரூ.80,385/– |
| 3. | மெசர்ஸ் அசோக்ராஜா அண்டு கோ, ஈரோடு | ரூ.82,200/– |

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவாக விலைப்புள்ளி ரூ.78,535/–க்கு கொடுத்துள்ள திரு. வி. தாமோதரன், ஈரோடு அவர்களின் விலைப்புள்ளி உள்ளூர் சந்தை நிலவரத்திற்கு ஏற்புடையதாக இருந்ததால் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பழுதுகளை சரி செய்யப்பட்டு பின்னர் பட்டியல் தொகை வழங்கப்பட்டது. குடிநீர் விநியோகப் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி குழாய் பழுதுகளை மாநகராட்சிகள் சட்டம் பிரிவு–15ன் கீழ் சரி செய்துள்ள விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பதிவு செய்யலாம்.

**இ2/602/14**

**47. பதிவு செய்யப்பட்டது.**

**48.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2ற்குட்பட்ட ஆர்.கே.வி. ரோட்டில் உள்ள லூம்வோ்ல்டு கட்டிடத்தின் முதல் தளத்தில் கடை எண்.10ல் இயங்கி வந்த ஜே.ஒ. கொண்டலாம்பட்டி பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் தொடர்ந்து நடத்தி வர இயலாமல், 31.01.2014 உடன் காலி செய்யப்பட்டு மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடை எண்.10ஐ பொது ஏலம் விடுவதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஏல நடவடிக்கை மேற்கொண்டமைக்கு மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

அ1/2543/14

**48. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**49.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட சம்பத் நகரில் கொங்கு கலையரங்கம் அருகில் உள்ள பயணிகள் நிழற்குடை பத்து ஆண்டுகளுக்கு முன் ஜேசீஸ் சங்கத்தினரால் கட்டப்பட்டு தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளதை மீண்டும் புதுப்பித்து அதை உபயோகத்திற்கு கொண்டு வரும் பணியை JCI, Erode நிறுவனத்தார் மேற்கொள்வதற்காக அனுமதி கோரியுள்ளார்.

எனவே மேற்படி சம்பத் நகர் கொங்கு கலையரங்கம் அருகிலுள்ள பயணிகள் நிழற்கூடத்தை JCI, Erode சங்கம் மூலம் சீரமைப்பு செய்யும் பணியை மேற்கொள்ள அனுமதி வழங்குவது குறித்து மாமன்றத்தின் பரிசீலணைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**இ3/3004/14**

**49. சம்பத் நகர் கொங்கு கலையரங்கம் அருகில் உள்ள பயணிகள் நிழற்கூடத்தை JCI, Erode சங்கம் மூலம் சீரமைப்பு செய்து கொள்ள அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.**

**50.** ஈரோடு மாநகராட்சியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ள பகுதியில் உள்ள பிச்சைக்காரன் பள்ளம் ஓடையானது பெரியசேமூரில் இருந்து கனிராவுத்தன் குளம், சூளை, பவானி மெயின்ரோடு வழியாக சென்று காவேரி ஆற்றில் கலக்கிறது. இந்த ஓடையில் கழிவுநீர் கலந்து வருவதால் சுகாதாரக்கேட்டை விளைவிக்கிறது. கனிராவுத்தன் குளம், சத்திரோடு, பவானி மெயின் ரோடு பகுதிகளில் வாழும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் இந்த ஓடையிலிருந்து வரும் துர்நாற்றம் மற்றும் கொசுக்கள் பரவுவதால் பெரிதும் பாதிப்படைகின்றனர். ஆகவே பிச்சைக்காரன் பள்ளம் ஓடையில் தேங்கியுள்ள கழிவுநீர் மற்றும் கழிவுகளை நீக்கி ஓடையின் இருபுறமும் கான்கிரீட் தடுப்பு சுவர் அமைத்து அபிவிருத்திப் பணிகள் செய்ய வேண்டியுள்ளது.

மேற்கண்ட திட்டப்பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கு (TNUIFSL) மூலம் தனியார் ஆலோசகர் நியமனம் செய்வதற்கும், அதற்காகும் செலவினத்தை TNUIFSL நிறுவனத்தில் உள்ள திட்ட தயாரிப்பு நிதியின் (Project preparation fund) கீழ் நியமனம் செய்து கொள்ளவும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மூலம் தமிழ்நாடு நகர்புற உட்கட்டமைப்பு அபிவிருத்தி சேவை நிதி கழகத்திற்கு பிரேரணைகள் அனுப்புவதற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/3226/14**

**50. அனுமதி வழங்கப்பட்டது.**

**51.** ஈரோடு மாநகராட்சியில் தலைமை நீரேற்று நிலையம் மேல்நிலைத் தொட்டிகள், அலுவலக கட்டிட இரவு காவலர் பணி, வ.உ.சி பூங்கா வெண்டிபாளையம் உரக்கிடங்கு, பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் தமிழ்நாடு முன்னாள் படைவீரர் கழக லிமிடெட் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்து வரும் 25 பணியாளர்களின் ஒப்பந்தக்காலம் 31.07.14ல் முடிவடைவதால் 01.08.14 முதல் ஒப்பந்தக்காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டித்து வழங்கவும் அதற்கான உத்தேச செலவினம் பிரதி மாதம் ரூ.469930/—ஐ (ரூபாய் நான்கு இலட்சத்து அறுபத்தி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து முப்பது) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேலும் அரசால் அகவிலைப்படி உயர்வு செய்யப்படும் பொழுது அதற்கேற்ப ஊதியத்தினை வழங்கும்போது ஏற்படும் கூடுதல் செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**சி1/13888/06**

**51. அனுமதி வழங்கப்பட்டது.**

**52.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்—4, 35 ஈரோடு "இ" கிராமம், காசிபாளையம், ரீ.ச.எண்.423/3Bல் உள்ள 6375 ச.அடி பரப்பளவு கொண்ட இடத்தில் வங்கிக் கட்டிடம் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளதால் மேற்படி இடத்தின் நில உபயோக மாற்றம் செய்ய வேண்டி தலைவர், ஈரோடு கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி லிமிடெட், எண்.கே.662 அவர்களின் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி இடம் முழுமைத் திட்டத்தில் ஆரம்ப குடியிருப்பு பகுதியில் உள்ளது. எனவே மேற்படி இடத்தை ஆரம்ப குடியிருப்பு பகுதியிலிருந்து முழுமைத் திட்டத்தில் வணிக உபயோக பகுதியாக மாற்றம் செய்ய மாமன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**இ3/5556/13**

**52. மண்டலம் 4, 35 ஈரோடு இ கிராமம் காசிபாளையம் ரீ.ச.எண்.423/3 Bல் உள்ள 6375 சதுரஅடி பரப்பளவு கொண்ட இடத்தில் வங்கிக் கட்டிடம் கட்ட இருப்பதால் மேற்படி இடம் ஆரம்ப குடியிருப்பு பகுதியாக உள்ளதால் ஆரம்ப குடியிருப்பு பகுதியிலிருந்து முழுமைத் திட்டத்தில் வணிக உபயோக பகுதியாக மாற்றலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.**

**53.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வீரப்பன் சத்திரம், சூரம்பட்டி, பி.பெ. அக்ரஹாரம், எல்லப்பாளையம், கங்காபுரம், திண்டல் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள சூரியம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஈரோடு மாநகராட்சியின் பராமரிப்பில் எடுத்துக் கொள்ள இம்மாமன்றத் தீர்மானம் எண்.139 நாள் 30.07.12ல் அனுமதி பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் மேற்படி சூரியம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் 31.05.14 வரை ஈரோடு மாநகரப்பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட குடிநீர் கட்டண நிலுவைத் தொகை ரூ.52.06 லட்சத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தினால் மேற்படி கூட்டுக்குடிநீர் திட்டத்தை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு தற்போதுள்ள நிலையில் வழங்கப்படும் என நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பராமரிப்புக்கோட்டம், ஈரோடு அவர்களின் கடிதம் எண்.கோ. சூரியம்பாளையம்/2012/இலசு/நாள் 04.06.14ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 31.05.14 வரையுள்ள குடிநீர்க் கட்டண நிலுவை ரூ.52.06 லட்சத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்குச் செலுத்தவும், மேலும் மேற்படி சூரியம்பாளையம் கூட்டுக்குடிநீர் திட்டத்தை இம்மாநகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளும் காலம் வரையிலான குடிநீர் கட்டணத்தைச் செலுத்தவும் மற்றும் மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டத்தை தற்போதுள்ள நிலையிலேயே மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ2/1921/12**

**53. இப்பொருளுக்கு பதிலாக அவசரக் கூட்டத்தில் பொருள் எண்.14ல் திருத்திய பொருள் வைக்கப்பட்டுள்ளது. இப்பொருளை ரத்து செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**54.** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பயன்பாடற்ற ஆழ்குழாய் கிணறுகளில் சிறு குழந்தைகள் தவறி விழுந்து அசம்பாவிதம் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு மேற்படி பயன்பாடற்ற திறந்த நிலையிலுள்ள ஆழ்குழாய் கிணறுகளை பாதுகாப்பாக மூடி வைத்திடவும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளாக மாற்ற வாய்ப்புள்ள ஆழ்குழாய் கிணறுகளை மாற்றுவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்தும் மாண்புமிகு உச்ச நீதி மன்ற பேராணை தீர்ப்பாய எண்.36/2009ல் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை தவறாது கடைபிடிப்பது தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர், ஈரோடு அவர்கள் தலைமையில் 16.04.2014 அன்று நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்வருமாறு.

1) ஆழ்குழாய் கிணறு அமைக்க விரும்பும் நபர் 15 நாட்களுக்கு முன்பாக ஆழ்குழாய் கிணறு அமைக்கவுள்ள விபரத்தினை அந்தப் பகுதியில் உள்ள அதிகாரிக்கு அதாவது மாவட்ட ஆட்சித்தலைவர்/கிராம ஊராட்சித் தலைவர்/ நிலத்தழ நீர் துறை அதிகாரிகள்/ பொது சுகாதாரத்துறை அதிகாரிகள்/ நகராட்சிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும்.
2) ஆழ்குழாய் கிணறு அமைக்கும் நிறுவனங்கள் (Drilling Agencies) தங்கள் நிறுவனத்தின் பெயரை மாவட்ட நிர்வாகத்தில் பதிவு செய்ய வேண்டியது கட்டாயமாக்கப்பட வேண்டும்.
3) ஆழ்குழாய் கிணறு அமைக்கும் போது அந்த இடத்தில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் நிறுவனத்தின் பெயர் மற்றும் அந்த ஆழ்குழாய் கிணற்றின் உரிமையாளர் பெயர் தொலைபேசி எண் மற்றும் முழு முகவரியுடன் கூடிய விபரப் பலகை அமைக்கப்பட வேண்டும்.
4) ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் போது கிணற்றை சுற்றி முள் கம்பி வேலி (Barbed wire fencing) அல்லது முறையான தடுப்பு அமைக்கப்பட வேண்டும்.
5) ஆழ்குழாய் கிணற்றின் Casing pipe மேல் பாகம் ஒரு மூடி கொண்டு நன்றாக மூடப்பட வேண்டும்.
6) ஆழ்குழாய் கிணறு பழுதாகும் பட்சத்தில் அது எக்காரணம் கொண்டும் திறந்த நிலையில் இருக்கக்கூடாது.
7) ஆழ்குழாய் கிணறு அமைக்கும் வேலை முடிந்த பிறகு அதன் அருகே உள்ள மண்குழிகள் மற்றும் கால்வாய்கள் உரிய முறையில் நிரப்பி சமப்படுத்தப்பட வேண்டும்.
8) பயனில்லாமல் கைவிடப்பட்ட ஆழ்குழாய் கிணறுகளை அடி முதல் தரைமட்டம் வரை களிமண், மணல், கூழாங்கற்கள் போன்றவற்றைக் கொண்டு நன்றாக நிரப்பி மூட வேண்டும்.
9) ஒரு இடத்தில் ஆழ்குழாய் கிணறு அமைத்த பின்பு அந்த இடத்தின் தரைமட்ட நிலை (Ground condition) ஆழ்குழாய் கிணறு அமைப்பதற்கு முன்பு எவ்வாறு இருந்ததோ அதே நிலைக்கு கொண்டு வரப்பட வேண்டும்.
10) மாவட்ட, வட்டார மற்றும் கிராம வாரியாக தோண்டப்பட்ட ஆழ்குழாய் கிணறு எண்ணிக்கை, உபயோகத்தில் உள்ள ஆழ்குழாய் கிணறுகள் எண்ணிக்கை பயனற்று கைவிடப்பட்ட ஆழ்குழாய் கிணறுகள் எண்ணிக்கை அவ்வாறு பயனற்ற ஆழ்குழாய் கிணறுகளில் பாதுகாப்பாக மூடி வைக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை மீதம் மூடப்பட வேண்டிய ஆழ்குழாய் கிணறுகள் எண்ணிக்கை போன்ற விபரங்கள் மாவட்ட அளவில் பேணப்பட வேண்டும்.
11) ஒரு ஆழ்குழாய் கிணறு எந்த நிலையில் பயனற்று கைவிடப்பட்டாலும் மேற்படி ஆழ்குழாய் கிணறு தரைமட்டம் வரை நன்றாக மூடி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது என்ற சான்று நிலத்தழ நீர்வளத்துறை, பொது சுகாதாரம் மாநகராட்சி மற்றும் தனியார் ஒப்பந்ததாரரிடமிருந்து சம்பந்தப்பட்ட ஆழ்குழாய் கிணறு உரிமையாளரால் பெறப்பட வேண்டும். இது குறித்த விபரங்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலகங்களில் பராமரிக்கப்பட வேண்டும்.
12) மேற்காணும் வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தேசிய அளவிலான தொலைக்காட்சி சேனல்கள் மூலம் விரிவாக விளம்பரம் செய்யப்பட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

மேலும் உள்ளாட்சி அமைப்புகளில் வலிமையான ஆழ்குழாய் கிணறுகளுக்கு மின்இணைப்பு வழங்குவது தொடர்பாக மாவட்ட நிர்வாகத்திடமோ/உள்ளாட்சி அமைப்புகளிடமோ தடையின்மை சான்று பெற்ற பின் மின் இணைப்பு வழங்கிடுமாறு தமிழ்நாடு மின்சார வாரியத்துறையினருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உத்தரவிடப்பட்டது.

மேற்கண்டவாறு ஆழ்குழாய் அமைப்பது தொடர்பாக வரப்பெற்ற வழிகாட்டு நெறிமுறைகளை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**இ2/2112/14**

**54. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**55.** ஈரோடு மாநகராட்சி மண்டலம்-3ல் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திருமதி பெ.மல்லிகா என்பவர் கண்காணிப்பாளர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணியை நிறைவு செய்துள்ளதால் வகுப்பு-2ல் காலியாக உள்ள கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்கக்கோரி விண்ணப்பம் வழங்கியுள்ளார்.

மாநகராட்சி பணிவிதிகளின்படி கணக்கு அலுவலர் பணியிடமானது கீழ்கண்டவாறு வகை படுத்தப்பட்டு பதவி உயர்வு வழங்க கூறப்பட்டுள்ளது.

வகுப்பு-II

இனம்-IV

| | | |
|---|---|---|
| கணக்கு அலுவலர் | பதவி உயர்வு மற்றும் பணிமாறுதல் | 1) கண்காணிப்பாளர் அல்லது உதவி வருவாய் அலுவலர் பணியிடத்தில் பணிபுரிபவர்களை கொண்டு பதவி உயர்வு மூலம் அல்லது பணிமாறுதல் மூலம் நிரப்பலாம்.<br>2) மேற்படி பணியிடத்தில் இரண்டு ஆண்டுக்கு குறைவில்லாமல் பணிபுரிந்திருக்க வேண்டும். |

திருமதி பெ.மல்லிகா கடந்த 01.02.2012 முதல் கண்காணிப்பாளர் பணியிடத்தில் பணிபுரிந்து வருகிறார். விதிகளின்படி 01.02.2014-ல் கண்காணிப்பாளர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணிநிறைவு செய்கிறார். இவ்வலுவலக செயல்முறை உத்திரவு ந.க.எண்.768/2014/சி1 நாள் 21.05.2014-ல் வெளியிடப்பட்ட 2014-15ஆம் ஆண்டுக்கான கணக்கு அலுவலர் பணியிடத்திற்கான தேர்ந்தோர் பட்டியலின்படி திருமதி பெ.மல்லிகா வகுப்பு-2ன் கீழ் வரும் கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு பெற தகுதியானவர் ஆவார்.

அரசாணை நிலை எண்.206 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 22.10.2008-ல் வழங்கப்பட்ட அறிவுரையில் வகுப்பு-2 அலுவலர்களை அரசின் உறுதியாக்கம் பெற்று மாமன்றத்தின் மூலம் நியமனம் செய்யப்படவேண்டும் என கூறப்பட்டுள்ளது. எனவே திருமதி பெ.மல்லிகா கண்காணிப்பாளர் என்பவர் விதிகளின்படி கண்காணிப்பாளர் பணியிடத்தில் இரண்டு ஆண்டுகள் பணியினை நிறைவு செய்துள்ளதால் காலியாகஉள்ள கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு பதவி உயர்வு வழங்க அரசின் உறுதியாக்கம் பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

2013-14-ம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பட்டியலின்படி திருமதி பெ.மல்லிகா, கண்காணிப்பாளர் என்பவருக்கு கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்க பொருள் வைக்கப்பட்டது. மேற்படி தேர்ந்தோர் பட்டியல் காலாவதியாகி விட்டதால் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட மாமன்ற தீர்மான எண்.884 நாள் 25.02.2014-ஐ ரத்து செய்து 2014-15-ம் ஆண்டிற்கான கணக்கு அலுவலர் பணியிடத்திற்கான தேர்ந்தோர் பட்டியலின்படி வரிசை எண்.1-ல் உள்ள திருமதி பெ.மல்லிகா என்பவருக்கு பதவி உயர்வு வழங்க அரசின் உறுதியாக்கம் பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதிக்கலாம்.

சி1/768/14

**55. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**56.** ஈரோடு மாநகராட்சி மண்டலம் – 1 வீரப்பன்சத்திரம் அலுவலகத்தில், பொது சுகாதாரபிரிவு வாகன பழுதுகளை சரி செய்யும் பணி, வாகனங்களுக்கு பேட்டரி பொருத்தும் பணி, வீரப்பன்சத்திரம் மற்றும் ஈரோடு தலைமை நீரேற்று நிலையம் மின்மோட்டார் பம்பு பழுது சரி செய்யும் பணி, பவானி மெயின் ரோடு பைப் உடைப்பு சரி செய்யும் பணி, ஈரோடு தலைமை நீரேற்று நிலையம் ஜெனரேட்டர் பழுது சரி செய்யும் பணி, வீரப்பன்சத்திர அலுவலக ஜெனரேட்டருக்கு பேட்டரி பொருத்தும் பணி ஆகிய பணிகளை மேற்கொள்ள இருந்த காலகட்டத்தில் பாராளுமன்ற தேர்தலையொட்டி தேர்தல் நடத்தை விதிமுறைகள் 05.03.2014 முதல் 18.05.2014 வரை அமலில் இருந்தது. ஆகவே, பொது சுகாதாரம் மற்றும் குடிநீர் திட்டப்பணிகள் ஆகியவற்றின் அவசர அவசியத்தை முன்னிட்டு சட்டப்பிரிவு எண். 15 – ன் கீழ் கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி பணிகளை சட்டப்பிரிவு எண் 15 – ன் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | கோப்பு எண். | பணியின் பெயர் | மதிப்பீடு | நிறுவனம் |
|---|---|---|---|---|
| 1 | இ2/563/2014 | TN 33 H 7226 டிராக்டர் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல் | ரூ.8852/– | Sri Escarts, Erode |
| 2 | இ2/575/2014 | TN 33 AH 2880 டம்பர் பிளேசர் வாகனத்திற்கு பேட்டரி பொருத்துதல் | ரூ. 6400/– | ஹை–டெக் பேட்டரீஸ், ஈரோடு |
| 3 | இ2/572/2014 | வீரப்பன்சத்திரம் தலைமை நீரேற்று நிலையம் 120 HP மின்மோட்டார் பம்பு எண்.1 பழுது சரி செய்தல் | ரூ.33,120/– | ஸ்டார் பம்பு & எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு |
| 4 | இ2/573/2014 | வீரப்பன்சத்திரம் தலைமை நீரேற்று நிலையம் பவானி மெயின் ரோடு 250 mm AC chars – 15 பைப் உடைப்பு சரி செய்தல் | ரூ.11750/– | திரு.எம். வெங்கடாசலம் |
| 5 | இ2/574/2014 | வீரப்பன்சத்திரம் தலைமை நீரேற்று நிலையம் 40HP மின்மோட்டார் பம்பு பழுது சரி செய்தல் | ரூ.54,200/– | ஸ்டார் பம்பு & எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு |
| 6 | இ2/580/2014 | ஈரோடு தலைமை நீரேற்று நிலையம் 725KVA ஜெனரேட்டரில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல் | ரூ.8,837/– | GMMCO Ltd, கோயமுத்தூர் |
| 7 | இ2/581/2014 | TN 33 AF 4354 டம்பர் பிளேசரில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்தல் | ரூ.4,900/– | காயத்ரி மணிமேகலை ஆட்டோ ஒர்க்ஸ், ஈரோடு |
| 8 | இ2/583/2014 | TN 33 Q 0551 வாகனத்திற்கு புதிய பேட்டரி பொருத்துதல் | ரூ. 6,400/– | ஹை–டெக் பேட்டரீஸ், ஈரோடு |
| 9 | இ2/584/2014 | வீரப்பன்சத்திரம் அலுவலகத்தில் 25 KVA ஜெனரேட்டர் பேட்டரி பொருத்துதல் | ரூ.5,100/– | ஹை–டெக் பேட்டரீஸ், ஈரோடு |
| 10 | இ2/614/2014 | அலுவலக ஜெனரேட்டர் பழுது ஆயில் சர்வீஸ் செய்யும் பணி | ரூ.15,047/– | எலக்ட்ரோ கன்ட்ரோல்ஸ், ஈரோடு |
| 11 | இ2/615/2014 | ஈரோடு தலைலை நீரேற்று நிலையம் 30 HP பம்பு யூனிட் எண். 3 பழுது நீக்கம் செய்யும் பணி | ரூ.15,800/– | ஸ்டார் பம்பு & எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | இ2/676/2014 | ஈரோடு தலைமை நீரேற்று நிலையம் 30HP யூனிட் – 1 பழுது நீக்கம் செய்தல் | ரூ.16,000/– | ஸ்டார் பம்பு & எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு |
| 13 | இ2/685/2014 | வீரப்பன்சத்திரம் தலைமை நீரேற்று நிலையம் 25HP சப்மெர்சிபல் மோட்டார் எண்.2 பழுது நீக்கம் செய்தல் | ரூ.47,000/– | ஹரீஸ் இன்ஜினியிரிங், ஈரோடு |
| 14 | இ2/686/2014 | TN 33 AH 2851 டம்பர் பிளேசர் வாகன பழுது | ரூ.7,950/– | ஜெயா ஆட்டோ ஒர்க்ஸ், ஈரோடு |
| 15 | இ2/597/2014 | TN 33 L 9695 டிராக்டர் வாகனத்திற்கு இரண்டு டயர்கள் இரண்டு டியூப்கள் மாற்றும் பணி | ரூ.28,000/– | சிகரம் டயர்ஸ், ஈரோடு |
| 16 | இ2/805/2014 | வீரப்பன்சத்திரம் தலைமை நீரேற்று நிலையம் பில்டர் பெட் எண்.3,2,1 கேட் வால்வு பழுது பணி | ரூ.37,000/– | ஸ்டார் பம்பு & எலக்ட்ரிக்கல் ரீவைண்டிங் ஒர்க்ஸ், ஈரோடு |
| 17 | இ2/807/2014 | 250mm AC மெயின் குழாய் உடைப்பு சரி செய்யும் பணி | ரூ.12,000/– | திரு.எம்.வெங்கடாசலம் |

அலுவலகக்குறிப்பு–

1. மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

இ2/807/14

**56. பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**57.** ஈரோடு மாநகராட்சி பேருந்து நிலையத்தில் கோவை பிளாட்பாரம் தெற்கிலிருந்து வடக்காக 8வது சிமெண்ட் தூண் அருகில் உள்ள காலி இடத்தில் எடைபார்க்கும் மிஷின் வைத்து உரிமம் பெற்று நடத்தி வந்த திரு. பி. கதிர்வேல் என்பவர் தனக்கு உடல்நிலை சரியில்லாமலும் மற்றும் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தன்னால் இவ்வினத்தை நடத்த முடியவில்லை எனவும் தெரிவித்துள்ளார். எனவே மேற்படி உரிமத்தை 31.03.2014 உடன் ரத்து செய்யுமாறு கோரியுள்ளார்.

பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் வெளியூரிலிருந்து தினந்தோறும் வந்து செல்கின்றனர். இதனால் பொதுமக்கள் நடந்து செல்வதற்கு சிரமம் ஏற்படுகின்றன. எனவே மேற்படி இடத்தில் எடைபார்க்கும் மிஷின் வைக்க வழங்கப்பட்ட குத்தகை உரிமத்தை 31.03.2014 உடன் ரத்து செய்து இதனை 01.04.2014 முதல் ஏல இனத்திலிருந்து நீக்கம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

அங்கீகரிக்கலாம்.

அ2/281/13

**57. அங்கீகரிக்கப்பட்டது.**

**இடம். ஈரோடு** **மேயர்,**

**நாள் 04.07.2014** **ஈரோடு மாநகராட்சி**

# ஈரோடு மாநகராட்சி
# மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்
# திருவள்ளுவராண்டு 2045 ஆனித் திங்கள் 17–ம் நாள்

2014–ம் ஆண்டு ஜீலை மாதம் 1–ஆம் தேதி (01.07.2014) செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு மாமன்ற கூட்ட அரங்கில் நடைபெற்ற மாமன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

***********

**1) வணக்கத்திற்குரிய மேயர், மரியாதைக்குரிய துணைமேயர், மண்டலத் தலைவர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களால் கொண்டு வரப்பட்ட நன்றித் தீர்மானம்.**

- ஏழை, எளிய மக்கள் அதிக அளவில் பயன்பெறும் பொருட்டு ஈரோடு அரசு தலைமை மருத்துவமனையில் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் 11–வது அம்மா உணவகம் ஈரோடு மாநகராட்சி மூலம் தோற்றுவிக்க அனுமதி அளித்தமைக்கும், ஏழை, எளிய நடுத்தர மக்கள் பெரிதும் பயனடையும் வகையில் மலிவு விலை மருந்தகங்கள் தோற்றுவித்தமைக்கும் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் தனது கோடான கோடி நன்றிகளை சமர்ப்பித்துக் கொள்கின்றது.

**58. வணக்கத்துக்குரிய மேயர் முன்மொழிய மரியாதைக்குரிய துணை மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**2) மரியாதைக்குரிய துணை மேயர் அவர்களால் கொண்டு வரும் தீர்மானம்**

ஈரோடு மாநகராட்சியில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக அடிப்படை பணியாளர்களாக பணிபுரிந்து வரும் அலுவலக உதவியாளர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்களில் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்திற்கான கல்வித்குதியான 12ம் வகுப்பு தேர்ச்சி பெற்று தட்டச்சில் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஏதேனும் ஒன்றில் முதுநிலையும் ஒன்றில் இளநிலையும் தேர்ச்சி பெற்றவர்களுக்கு காலியாக உள்ள 7 இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடங்களுக்கு பதவி உயர்வு அளித்து நிரப்பிக் கொள்ள அனுமதி வேண்டி அரசிற்கு கருத்துரு அனுப்ப மான்றம் அனுமதி வழங்கியுள்ளது. ஈரோடு மாநகராட்சி மண்டலம்–4–ல் துப்புரவு பணியாளராக பணிபுரியும் கு.செந்தில்குமார் என்பவர் இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியிடத்திற்கான கல்வித்குதியினை பெற்றுள்ளதால், மேற்படி பணியாளருக்கும் பதவி உயர்வு அளித்து காலியாக உள்ள இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் பணியினை நிரப்பிக்கொள்ள அனுமதி வேண்டி அரசிற்கு கருத்துரு அனுப்ப இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**59. மரியாதைக்குரிய துணை மேயர் முன்மொழிய வணக்கத்துக்குரிய மேயர் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**3) 2–வது மண்டலத் தலைவர் திரு. பி. கேசவமூர்த்தி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**

- ஈரோடு மாநகராட்சி மைய அலுவலகம் மற்றும் மண்டலம்–2 அலுவலக வளாகங்களில் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள இரும்பு சாமான்கள், மின்சார உதிரிபாகங்களை ஏலம் விட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**60. 2ஆவது மண்டலத் தலைவர் திரு. பி. கேசவமூர்த்தி முன்மொழிய 3ஆவது மண்டலத் தலைவர் திரு. இரா. மனோகரன் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**4) 8–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. கே. கிருஷ்ணராசு அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**

- காவேரி நகர் பகுதியில் தார்சாலை வசதியும், இருபுறமும் சாக்கடை வசதியும் ஏற்படுத்தித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- கொத்துக்காரர் தோட்டம் பகுதியில் கான்கிரீட் சாலை மற்றும் தார்சாலை வசதியும், இருபுறமும் சாக்கடை வசதி ஏற்படுத்திதர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மல்லிநகர் பின்புறம் உள்ள பகுதியில் கான்கிரீட் சாலை வசதி மற்றும் சாக்கடை வசதி செய்து தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- மல்லிநகர் மற்றும் காவேரி நகர் பகுதியில் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக ரேசன் கடைகள் அமைத்திட மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுமார் 5 சென்ட் நிலம் வழங்க இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**61. 8ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு.கே. கிருஷ்ணராசு முன்மொழிய 7வது வார்டு மாமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வன் வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**5) 34–வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. பூமதி அவர்களால் கொண்டு வரப்பட்ட தீர்மானம்**

- முத்தம்பாளையம் பண்ணை காடு முதல் ஓடை வரை பாதாள சாக்கடை அமைத்திட இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- முத்தம்பாளையம் கொங்கனாம்பாளி பகுதியில் சமுதாய கூடம் ஒன்றினை கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.
- சங்கத்துறையிலிருந்து அன்னை நகர் இணைப்பு பாலம் கட்டித்தர இம்மாமன்றம் தீர்மானிக்கிறது.

**<u>மழைநீர் வடிகால் அமைக்க வேண்டிய பகுதிகள்</u>**

- லட்சுமி கார்டன் பகுதி முதல் முத்துசாமி காலனி ரோடு வரை
- அண்ணா நகரில் இருந்து ஹவுசிங் போர்டு வரை
- இரங்கம்பாளையம் காமாட்சியம்மன் கோவில் அருகில் மற்றும் ஹவுசிங் போர்டு பகுதி போர்வெல் அருகில்

**62. 34ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. பி. பூமதி முன்மொழிய 33ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜி. ராதா வழிமொழிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

**6)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்திரவின்படி ஏற்கனவே 10 எண்ணிக்கை கொண்ட அம்மா உணவகங்கள் திறம்பட நல்ல முறையில் செயல்பட்டு வருகிறது. மேலும் தற்பொழுது ஈரோடு மாவட்ட அரசு பொது மருத்துவமனையில் பொதுமக்கள் உபயோகத்திற்காக ஒரு புதிய அம்மா உணவகம் அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் 02.06.2014 அன்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3க்குட்பட்ட அரசு பொது மருத்துவமனை பகுதியில் அம்மா உணவக கட்டிடம் புதியதாக கட்டுதல் பணி நடைபெறவுள்ளது. மேற்கண்ட அம்மா உணவக கட்டிடத்திற்கு சமையல் செய்வதற்கு தேவையான பாத்திரங்கள் சமையல் மின்சாதனப் பொருட்கள் மற்றும் இதர பொருட்கள் வாங்குதல் பணி ரூ.10.00 இலட்சத்திற்கு 04.06.2014 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட பணிக்கு 16.06.2014 அன்று இ.டெண்டரிங்/மூடி முத்திரையிட்ட முறையில் முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டுடன் ஒப்புநோக்கும் போது பெறப்பட்ட விபரம் கீழ்கண்டவாறு

| | | |
|---|---|---|
| 1. | Sabari Trading Corporation, Coimbatore | ரூ. 9,39,995.00 |
| 2. | Ponmala Industries, Coimbatore | ரூ. 9,53,780.00 |
| 3. | Dolor Engg. Industries Pvt Ltd. Bangalore | ரூ. 9,87,650.00 |

வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 மற்றும் 2ல் உள்ள ஒப்பந்ததாரர்கள் மதிப்பீட்டுத் தொகைக்கு 1 சதவீதம் டேவணித் தொகை வழங்கியுள்ளார்கள். வரிசை எண்.3ல் உள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு முன்வைப்புத் தொகையில் விலக்கு அளிக்க சிறுதொழில் Small scale industries certificate இணைத்துள்ளனர். வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை விடக் குறைவான Sabari Trading Corporation, Coimbatore நிறுவனத்தினை, மேலும் விலையைக் குறைத்துக் கொடுக்க இயலுமா என இவ்வலுவலக கடிதம் எண்.இ1/2910/2014–2 ன்படி 16.06.2014 அன்று கேட்பு அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 17.06.2014 தேதிய கடிதத்தில் தற்போது மேலும் குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார். எனவே வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டுத் தொகையை விட குறைவான Sabari Trading Corporation, Coimbatore நிறுவனத்தின்ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று Sabari Trading Corporation, Coimbatore நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

**இ1/2910/2014–2**

**63. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது**

**7)** ஈரோடு மாநகராட்சி மற்றும் அதனை சுற்றியுள்ள நான்கு நகராட்சிகளுக்கும் சேர்த்து பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு இம்மாமன்றத் தீர்மானம் எண்.758, நாள் 30.09.2008-ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு உள்ளது. மேற்படி பணியை KfW நிதி ஆதாரத்துடன் செயல்படுத்த, அரசாணை (நிலை) எண்.249 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 11.12.2008-ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிப்பம்-1ன் பணிகள் ரூ.59.83 கோடியில் செய்வதற்கு தொழில்நுட்ப அனுமதி ந.க.எண்.55420/08/வஅ2 நாள்:20.05.2009 கண்காணிப்பு பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம், சென்னை-5 அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியை செய்வதற்கு M/s.KRRI-

TAPI, Hyderabad நிறுவனத்தாருக்கு பணி உத்திரவு ந.க.எண்.இ1/21927/2006 நாள் 20.01.2010-ல் வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்த பணியை செய்வதற்கு 3 ஆண்டுகள் கால நிர்ணயம் செய்யப்பட்டு 20.01.2010 முதல் 19.01.2013 வரை பணிகள் நடைபெற்று வந்தது. இந்த 3 ஆண்டுகள் முடிவடைந்த காலகட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட பணிகள் ஒப்பந்ததாரரால் முடிக்கப்படவில்லை. இதனால் ஒப்பந்ததாரால் கேட்டுக் கொள்ளப்பட்டதின் காரணமாக மேலும் 6 மாத காலம் 19.07.2013 வரை நீட்டிப்பு வழங்கப்பட்டது. இந்த 6 மாத காலம் நீட்டிப்பு வழங்கியும் ஒப்பந்ததாரரால் மேற்கண்ட பணிகள் முடிக்கப்படவில்லை. எனவே M/s.KRRI-TAPI, Hyderabad நிறுவனத்தாரின் ஒப்பந்தத்தை இம்மாமன்றம் தனது தீர்மானம் எண்.666 நாள் 05.08.2013ல் ரத்து செய்துள்ளது. மேலும் இந்த ரத்து செய்த பணிக்கு மறு ஒப்புந்தப்புள்ளி கோரவும் மாமன்றம் அனுமதி அளித்துள்ளது.

அதன்படி மேற்படி சிப்பம்-1ன் மீதமுள்ள (ஈரோடு பகுதி-1, சூரம்பட்டி பகுதி-9, காசிபாளையம் பகுதி-10) பணிக்கு திருத்திய மதிப்பீடு ரூ.71.00 கோடிக்கு தயாரிக்கப்பட்டு, தொழில்நுட்ப அனுமதி ந.க.எண்.30058/13/DO1 நாள் 13.09.2013 தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரக அலுவலகம், சென்னை-5 அவர்களால் வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி 30.10.2013-ல் கோரப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி கோரியதில் M/s.Anchor Ceramic Co (P) Ltd., Chennai ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது. இதனை தொழில்நுட்ப நிலைக்குழு பரிசீலனை செய்து ஒப்பந்ததாரரின் தகுதிக்கு ஒப்புதல் 05.11.2013-ல் பெறப்பட்டது. இந்நிலையில் ஒப்பந்தத்தை ரத்து செய்ததை எதிர்த்து ஒப்பந்ததாரரால் ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் "பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலனை செய்யக்கூடாது", என வலியுறுத்தி வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண்.AOP 129 of 2013 தடை உத்திரவு பெறப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநகராட்சியால் உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டு வழக்கு எண்.CMA.619 of 2014 தடை உத்திரவை ரத்து செய்யப்பட்டது. அதன்படி 09.05.2014-ல் ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியின் (Price bid) பரிசீலனை செய்ததில் விபரம் கீழ்கண்டவாறு:-

| ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்த மதிப்பீட்டு தொகை | விலைவிகித சதவீதம் |
|---|---|---|
| M/s.Anchor Ceramic Co (P) Ltd., Chennai | ரூ.54.00 கோடி | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (Price bid) ரூ.58.70 கோடி மதிப்பீட்டை விட (+) 8.89% அதிகம் |

மேற்கண்ட விலைவிகிதம் மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதால் ஒப்பந்ததாரரிடம் விலைவிகிதத்தை குறைத்து கொடுக்க இவ்வலுவலகக் கடிதம் எண்.பாசாதி/4498/2013 நாள் 14.05.2014-ல் கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் தனது 17.05.2014ம் தேதிய கடிதத்தில் தான் வழங்கிய ஒப்பந்த விலைவிகிதத்தில் 0.04% குறைத்து தர ஒப்புதல் அளித்துள்ளார். அதன்படி விலைவிகிதம் விபரம் கீழ்கண்டவாறு.

| ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (Price bid) | ஒப்பந்ததாரரின் விலைவிகித குறைத்த மதிப்பு (Negotiation) |
|---|---|
| (+) 8.89% | (+) 8.85% |

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியானது மதிப்பீட்டு விலை விகிதத்தை விட (+) 8.85% அதிகமாக உள்ளதை பொறியியல் கையேடு Clause No.2.7.2 (page No.9)-ன்படி தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று பணிகளை மேற்கொள்வதற்கும் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளுக்கு இந்த சிப்பத்திற்கு அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.59.59 கோடியில் இதுவரை ரூ.23.00 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மேற்படி பணிக்கு ரூ.71.00 கோடி செலவினம் எதிர்பார்க்கப்படுவதால் கூடுதலாக ஆகும் செலவினத்தை IUDM திட்டம் (அ) TNUIFSL நிதி

நிறுவனம் (அ) அரசின் பிற திட்டங்களில் நிதி உதவி பெற்று மேற்கொள்வதற்கும், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் முன் அனுமதி பெற்று வரப்பெற்ற ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதத்தை ஏற்று தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று பணி உத்திரவு வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. கூடுதல் செலவினத்தை IUDM திட்டம் (அ) TNUIFSL நிதி நிறுவனம் (அ) அரசின் பிற திட்டங்களில் நிதி உதவி பெற்று மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.

**பா.சா.தி/4498/14**

**64. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்கள் ஈரோடு மாநகரில் அமைக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தால் எவ்வித பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை என இத்திட்டத்தை ஆட்சேபனை செய்தார்.**

**8)** ஈரோடு மாநகராட்சியில் கீழ் குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு 20.06.2014 அன்று மறு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டுள்ளவாறு உள்ள இனங்களுக்கு மட்டும் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | ஏலம் இன விபரம் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ஒரு ஆண்டிற்கு ரூ.) |
|---|---|---|---|
| 1. | எம். பதுருதீன் அசேன் அலி, ஈரோடு | நேதாஜி சாலை வணிக வளாகத்தில் தரை தளம் பகுதியில் செயல்படும் செல்லார் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம். | 601650— |
| 2. | கே. செல்வராஜ், ஈரோடு | பேருந்து நிலையம் வணிக வளாக செல்லார் பகுதி இருசக்கர வாகனங்களுக்கு வசூலிக்கும் உரிமம் | 1752000— |

மேற்காணும் வ.எண்.1வது இனம் நேதாஜி சாலை வணிக வளாக தரைத்தள இருசக்கர வாகனம் நிறுத்துமிடத்திற்கு இதுவரை ஐந்து முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 20.06.2014 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு. எம். பகுருதீன் அசேன் அலி என்பவர் ரூ.601650—க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி இனத்திற்கு 01.04.2014 முதல் துறை மூலம் வசூல் செய்வதால் ஆண்டுக்கு ரூ.487243— வருகிறது. துறை மூலம் வசூல் செய்ய பணியாளர் ஊதியம், கட்டண வில்லை கட்டணம் மற்றும் மின்கட்டணம் ஆண்டுக்கு ரூ.1673556— செலவாகும். துறை மூலம் வசூல் செய்வதால் ஒரு ஆண்டுக்கு ரூ.114407— நிதி இழப்பு ஏற்படும். எனவே மேற்படி நிதி இழப்பை தவிர்க்கவும், வரி வசூல் பணியாளரை இப்பணிக்கு வருவாய் உதவியாளர்களை பயன்படுத்துவதால் வரி வசூல் பணி மற்றும் அவர்கள் கவனிக்கும் இதரப்பணிகள் பாதிக்கப்படுவதால் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட தொகை ரூ.601650— துறை வசூலை விட கூடுதலாக உள்ளதால் ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

மேற்காணும் வ.எண்.2வது இனம் பேருந்து நிலையம் வணிக வளாக செல்லார் பகுதி வாகன நிறுத்தும் இடத்திற்கு ஐந்து முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் 20.06.2014 அன்று நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் திரு. கே. செல்வராஜ் என்பவர் ரூ.1752000—க்கு

ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி குத்தகை இனத்திற்கு 01.04.2014 முதல் துறை மூலம் வசூல் செய்வதால் ரூ.1742524— வருகிறது. துறை மூலம் வசூல் செய்ய பணியாளர் ஊதியம், கட்டண வில்லை கட்டணம் மற்றும் மின்கட்டணம் ஆண்டுக்கு ரூ.2216292— செலவு ஏற்படும். எனவே மேற்படி நிதி இழப்பை தவிர்க்கவும் வசூல் பணிக்கு வருவாய் உதவியாளர்களை பயன்படுத்துவதால் வரி வசூல் பணி மற்றும் அவர்கள் கவனிக்கும் இதரப்பணிகள் பாதிக்கப்படுவதால் ஒப்பந்தப்புள்ளியில் கோரப்பட்ட தொகை ரூ.1752000— துறை வசூலை காட்டிலும் இருப்பதால் மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொகையை ஏற்பது குறித்து மாமன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் முடிவு செய்யலாம்.

**அ1/6100/12**

**65. வரிசை எண்.1 நேதாஜி வணிக வளாகத்தில் தரைதளம் பகுதியில் செயல்படும் செல்லார் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்திற்கு கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கு திரு. எம். பதுருதீன் அசேன்அலி என்பவர் கோரியுள்ள ஒப்பந்த புள்ளி தொகையை ஏற்கத் தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண்.2 மாநகராட்சியின் நிதி இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், துறைமூலம் வசூல் செய்யப்படும் தொகையினைக் காட்டிலும் கூடுதலாக கேட்கப்பட்டுள்ள திரு. K. செல்வராஜ் என்பவரின் ஒப்பந்தபுள்ளி தொகையை ஏற்கத் தீர்மானிக்கப்பட்டது.**

**9)** திடக்கழிவு மேலாண்மை திட்டப்பணிகளுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை செயலாளர் தலைமையில் தலைமை செயலகம், சென்னையில் 04.02.2014 தேதியன்று திட்ட அனுமதி வழங்குதல் குழு கூட்டம் நடைபெற்றது. மேற்கண்ட கூட்ட நடவடிக்கைகள் தொடர்பான கடிதத்தில் ஒவ்வொரு வருடமும் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்குத் தேவையான தள்ளுவண்டிகள், வாகனங்கள் மற்றும் குப்பைக்கலன்களை வாங்குவதற்கான பிரேரணைகளை வழங்குவதற்கு பதிலாக திடக்கழிவு மேலாண்மை பணியில் முதல்நிலை சேகரம், போக்குவரத்து, திடக்கழிவுகளை உரமாக மாற்றுதல் மற்றும் மிஞ்சியுள்ள கழிவுகளை கழிவு செய்தல் முறை உள்ளிட்ட பணிகள் உள்ளடக்கிய விரிவான பிரேரணையை வழங்குமாறு கூறப்பட்டுள்ளது. மேலும் திடக்கழிவு மேலாண்மையில் தற்போதுள்ள உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக ஆராய்ந்து தேவையான உட்கட்டமைப்பு வசதிகளுடன் பிரேரணையை வழங்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எனவே இம்மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தேவையான நிதியுதவி பெற விரிவான பிரேரணை தயார் செய்யும் பொருட்டு தனியார் ஆலோசனை நிறுவனத்தினை நியமித்து நடவடிக்கை மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு—

மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/5431/13**

**66. அனுமதி வழங்கப்பட்டது.**

**10)** ஈரோடு மாநகராட்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள நான்கு நகராட்சிகளையும் சேர்த்து பாதாள சாக்கடை அமைக்கும் பணிக்கு இம்மாமன்ற தீர்மானம் எண்.758 நாள் 30.09.2008ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன்படி, மேற்படி பணியை Kfw நிதி ஆதாரத்துடன் செயல்படுத்த அரசு ஆணை (நிலை) எண்.249, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள் 11.12.2008ல் நிர்வாக அனுமதி அளித்துள்ளது. இதில் சிப்பம்—1ன் ஈரோடு பகுதி 1, சூரம்பட்டி பகுதி—9,

காசிபாளையம் பகுதி–10 ஆகிய பகுதிகளுக்கு கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, கழிவுநீர் உந்து நிலையம் மற்றும் கழிவுநீர் உந்து பிரதான குழாய் அமைக்கும் பணியின் மீதமுள்ள பணிகளுக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.71.00 கோடிக்கு 30.10.2013 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை இம்மாமன்றத்தின் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் முன் அனுமதியுடன் 12.06.2014–ல் ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவிற்கு அனுப்பப்பட்டது. அதன்படி சிப்பம்–1ன் மீதமுள்ள பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர். ஆங்கர் செராமிக் கோ பி.லிட்., சென்னை அவர்களின் இறுதியாக குறைத்துக் கொடுக்கப்பட்ட விலைவிகிதம் 2013–14ம் ஆண்டின் தரப்படுத்தப்பட்ட விலை விகித மதிப்பீட்டை விட 8.85 சதவீதம் கூடுதலாக உள்ளதற்கு 20.06.2014ல் சென்னையில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு பரிசீலித்து ஒப்புதல் வழங்கியுள்ளது.

எனவே மேற்படி சிப்பம்–1ன் மீதமுள்ள பணியினை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழுவின் முடிவின் மீது மேல் நடவடிக்கை தொடர மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் குழு பரிசீலித்து ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆகவே மேற்கண்ட சிப்பம்–1ன் மீதமுள்ள பணிக்கு பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கை தொடர மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**பா.சா.தி/4498/13**

**67. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது. 27வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி அவர்கள் ஈரோடு மாநகரில் அமைக்கப்பட்டு வரும் பாதாள சாக்கடைத் திட்டத்தால் எவ்வித பிரயோஜனமும் ஏற்படப்போவதில்லை என இத்திட்டத்தை ஆட்சேபனை செய்தார்.**

**11)** ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி, ஈரோடு வட்டம், ஈரோடு மேற்கு உள்வட்டம் கங்காபுரம் கிராமம், ரீ.ச.எண்.4/5–ல் 0.79.5 ஹெக்டேர் விஸ்தீரணம் தீர்வை ஏற்படாத தரிசு பாறை புறம்போக்கு நிலத்தினை நில உரிமை மாற்றம் செய்து தர ஈரோடு டெக்ஸ்டைல் மால் நிறுவனத்தினர் கோரியதன் பேரில், ஈரோடு வருவாய் வட்டாட்சியர் அவர்கள் ந.க.எண்.3733/2014/ஆ8 நாள் 03.06.2014 தேதிய கடிதத்தில் மேற்படி நிறுவனத்தினருக்கு நில உரிமை மாற்றம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், இதன் பேரில் ஆட்சேபணைகள் ஏதேனும் இருப்பின் தீர்மான வடிவில் தங்கள் கருத்தினை ஈரோடு வட்டாட்சியருக்கோ நில வருவாய் ஆய்வாளருக்கோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

ஈரோடு மாநகராட்சி கங்காபுரம் கிராமம் ரீ.ச.எண்.4/5–ல், 0.79.5 ஹெக்டேர் விஸ்தீரணம் தீர்வை ஏற்படாத தரிசு பாறை புறம்போக்கு நிலத்தினை வருவாய் துறையால், ஈரோடு டெக்ஸ்டைல் மால் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து தர இம்மாநகராட்சி சார்பாக எவ்வித ஆட்சேபனை இல்லை என தெரிவிப்பதற்கு மாமன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**இ3/3073/14**

**68. கங்காபுரம் கிராமம் ரீ.ச.எண்.4/5ல் 0.79.5 ஹெக்டேர் விஸ்தீரணம் தீர்வை ஏற்படாத தரிசு பாறை புறம்போக்கு இடத்தை வருவாய் துறையால் ஈரோடு டெக்ஸ்டைல்மால் நிறுவனத்திற்கு நில உரிமை மாற்றம் செய்து தர இம்மாநகராட்சி ஆட்சேபனை இல்லை என தெரிவிக்க தீர்மானிக்கப்பட்டது. 27ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி. இராதாமணிபாரதி ஆட்சேபனை செய்தார்.**

**12)** ஈரோடு மாநகராட்சியில் கீழ்கண்ட இலகுரக வாகனங்கள் (Light Motor Vehicles) வாங்கப்பட்டு 18 வருடங்களுக்கு மேல் இயங்கி வருகின்றன.

| வ. எண். | வாகன பதிவு எண். மற்றும் தயாரிப்பு | வாங்கப்பட்ட தேதி |
|---|---|---|
| 1. | TN33 B 9289 ஹிந்துஸ்தான் மோட்டார் தயாரிப்பு அம்பாசிடர் வாகனம் (டீசல்) | 15.05.1993 |
| 2. | TN33 F 5450 மகேந்திரா அண்டு மகேந்திரா தயாரிப்பு ஜீப் வாகனம் (டீசல்) | 29.10.1996 |
| 3. | TN33 F 6111 மாருதி தயாரிப்பு ஆம்னி வேன் வாகனம் | 15.11.1996 |

மேற்கண்ட வாகனங்கள் நாட்பட்ட இயக்கத்தின் காரணமாக பாகங்கள் தேய்மானமடைந்து அடிக்கடி பழுது ஏற்பட்டு சரி செய்யப்பட்டு வருவதால் பராமரிப்பு செலவினம் அதிகம் ஏற்பட்டு வருகிறது. மேலும் 12.04.1979ம் தேதியிட்ட Home Department G.O. (MS) No.960 அரசாணையில் பெட்ரோல் மற்றும் டீசலில் இயங்கும் வகனங்கள் 10 வருடங்கள் இயங்கிய பின் கழிவு செய்யலாம் என குறியீடு நிர்ணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. தற்போது வ.எண்.1ல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் 21 வருடமும், வ.எண்.2 மற்றும் 3ல் குறிப்பிடப்பட்டுள்ள வாகனம் 18 வருடமும் இயங்கியுள்ளன. எனவே மேற்கண்ட மூன்று வாகனங்களையும் கழிவு செய்து மூன்று எண்ணிக்கை புதிய வாகனங்களை வாங்கி பயன்படுத்த வேண்டியுள்ளது.

எனவே மேற்கண்ட மூன்று எண்ணிக்கை பழைய இலகுரக வாகனங்களை கழிவு செய்யவும், அவற்றிற்கு பதிலாக Toyota Kirloskar Moter Pvt Ltd நிறுவன தயாரிப்பு வாகனமான Innova 2.5 G(M) Diesel 7 Sented BS3 PS AC: Variant Gx மாடல் வாகனம் மூன்று எண்ணிக்கையினை அந்நிறுவனம் ஒரு வாகனத்திற்கு வழங்கியுள்ள DGS & D விலை ரூ.10,38,461/– வீதம் மூன்று வாகனங்கள் மொத்த விலை ரூ.3115384/–க்கு பொது நிதியில் வாங்கி பயன்படுத்தவும், இது தவிர வாகனங்களுக்கான பதிவு கட்டணம், இன்சூரன்ஸ் மற்றும் பிற வரியினங்களுக்கான செலவினத்திற்கும் மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்டவாறு மூன்று பழைய வாகனங்களை கழிவு செய்யவும் அவற்றிற்கு பதிலாக மூன்று புதிய வாகனங்களை வாங்கவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**இ1/3306/14**

**69. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**13)** ஈரோடு மாநகராட்சியில் உள்ள தெருவிளக்குகள் பயன்பாட்டில் அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில் மினசிக்கன நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பணியில் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் (PPP) நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அலுவலக கடிதம் எண் 36321/2011/இ1 நாள் 22.02.2012 ன்படியும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் அரசாணை எண் G.O No.88 நாள் 24.09.2012-ன் படியும் இம்மாநகராட்சியின் தீர்மான எண் 349, நாள் 27.12.2012-படியும் நடவடிக்கை எடுக்கப்பட்டு அரசாணை எண். 409 நிதி (ஊதியம்) துறை நாள். 26.11.2012-ல் பொது மற்றும் தனியார் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டப்பணிகளுக்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் நகராட்சி நிர்வாக ஆணையரின் வழிகாட்டு நெறிமுறைகளின்படியும் இப்பணிக்கு தகுதி கோரிக்கை விண்ணப்பங்கள் (Request For Qualification (RFQ)) 22.03.2013 தேதியன்று பெறப்பட்டன. அதனை தொடர்ந்து இப்பணிக்கு கருத்துரு கோரிக்கை விண்ணப்பங்கள் (Request For

Proposal(RFP)) 17.06.2013-ம் தேதியன்று கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதில் RFP ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மூன்று நிறுவனங்களில் முதல்நிலை நிறுவனமாக விளங்கிய M/S. Schnell energy equipments private limited, Coimbatore மற்றும் M/S. Salzer electronics limited, Coimbatore கூட்டு நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்ற தீர்மானம் எண். 615 நாள் 31.07.2013-ல் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்கண்ட நிறுவனத்திற்கு 06.08.2013 தேதியன்று Letter of intent வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து மேற்படி நிறுவனத்தார் இப்பணியின் முதல் கட்டமாக தெருவிளக்கு மின் இணைப்புகளில் முதலீட்டு தர மின்தணிக்கையினை (Investment Grade Audit (IGA)) முடித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளனர். மேலும் மேற்கண்ட தணிக்கை அறிக்கையின் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களால் மூன்றாம் நபர் ஆய்வுக்காக நியமிக்கப்பட்ட (third Party inspection )TUV SUD South Asia, நிறுவனத்தாரால் தள ஆய்வு (physical verification) Random முறையில் மேற்கொள்ளப்பட்டு ஏற்கப்பட்டுள்ளது.

முதலீட்டுத்தர மின் தணிக்கை (IGA) அறிக்கையின்படி தற்போதுள்ள தெருவிளக்குகளின விபரம் பின்வருமாறு.

| வ. எண் | தெருவிளக்கு விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 40 வாட்ஸ் குழல் விளக்கு | 12585 |
| 2 | 70 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 364 |
| 3 | 150 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 903 |
| 4 | 250 வாட்ஸ் சோடியம் ஆவி விளக்கு | 1394 |
| 5 | 250 வாட்ஸ் மெட்டல் ஹலாய்டு விளக்கு | 187 |
| 6 | 125 வாட்ஸ் மெர்குரி ஆவி விளக்கு | 79 |
| 7 | 250 வாட்ஸ் மெர்குரி ஆவி விளக்கு | 153 |
| 8 | 400 வாட்ஸ் சோடியம ஆவி/ மெட்டல் ஹலாய்டு விளக்கு | 261 |
| 9 | 1x36வாட்ஸ் சி.எப்.எல்/ 1x24 வாட்ஸ் டி5 விளக்கு | 609 |
| 10 | 1x36வாட்ஸ் சி.எப்.எல் விளக்கு | 789 |
| 11 | 2x24 வாட்ஸ் டி5 விளக்கு | 151 |
| 12 | 4x24 வாட்ஸ் டி5 விளக்கு | 191 |
| 13 | 5x24 வாட்ஸ் டி5 விளக்கு | 336 |
| | **மொத்தம்** | **18002** |

முதலீட்டுத்தர மின் தணிக்கை (IGA) அறிக்கையின்படி தற்போதுள்ள் தெருவிளக்கு மின்இணைப்புகளின் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | தெருவிளக்கு மின்இணைப்புகளின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஒருமுனை மின்இணைப்பு | 1492 |
| 2 | மும்முனை மின்இணைப்பு | 61 |
| | **மொத்தம்** | **1553** |

முதலீட்டுத்தர மின் தணிக்கை (IGA) அறிக்கையின்படி மின் சேமிப்பிற்காக பொருத்தப்பட உள்ள உபகரணங்கள், புதிய தெருவிளக்குகளின் விபரம் மற்றும் மூலதன தொகை பின்வருமாறு.

| S. No. | Description | Quantity (in nos.) | Rate per Quantity | Amount (in Rs.) |
|---|---|---|---|---|
| 1 | 15/20W LED (New lamps) | 1,996 | 6,750 | 1,34,73,000 |
| 2 | 220W SVL Fixture (New lamps-567, conversion-268) | 835 | 10,000 | 83,50,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | 16Mtr High mast light | 7 | 6,00,000 | 42,00,000 |
| 4 | Mini High mast light | 31 | 1,35,000 | 41,85,000 |
| 5 | 25Mtr High mast light | 1 | 8,00,000 | 8,00,000 |
| 6 | 15/20W LED (Conversion from FTL 40 W) | 12,585 | 6,750 | 8,49,48,750 |
| 7 | 220W Bulb only (Conversion from SVL 250 W) | 1,394 | 1,500 | 20,91,000 |
| 8 | 130W SVL Fixture (Conversion from MVL 250W-153, MVL 125 W-79,New lamps -2) | 234 | 8,000 | 18,72,000 |
| 9 | Streetlight Controllers | 576 | 29,000 | 1,67,04,000 |
| 10 | 4kVA Voltage Controller 1ph | 757 | 55,000 | 4,16,35,000 |
| 11 | 6kVA Voltage Controller 1ph | 202 | 72,500 | 1,46,45,000 |
| 12 | 8kVA Voltage Controller 1ph | 30 | 84,000 | 25,20,000 |
| 13 | 9kVA Voltage Controller 3ph | 87 | 1,31,000 | 1,13,97,000 |
| 14 | 12kVA Voltage Controller 3ph | 15 | 1,58,000 | 23,70,000 |
| 15 | 15kVA Voltage Controller 3ph | 21 | 1,78,000 | 37,38,000 |
| 16 | 21kVA Voltage Controller 3ph | 1 | 2,05,000 | 2,05,000 |
| 17 | Supply and Erection of 9 meter MS Tubular Pole with bracket and accessories | 418 | 23,400 | 97,81,200 |
| 18 | Rate for Supply and Erection of 4x10sq.mm UG Cable per running meter | 14,630 | 125 | 18,28,750 |
| 19 | Road cutting charges | 12,540 | 135 | 16,92,900 |
| 20 | Central Computerized Monitoring Centre (CCMC) | 1 | 20,00,000 | 20,00,000 |
| 21 | Individual Lamp Monitoring (ILM) Device (Existing-1261,New median lights-567) | 1,828 | 10,000 | 1,82,80,000 |
| | **TOTAL** | | | **24,67,16,600** |

மேலும் புதிய தெருவிளக்குகள் அமைத்தல் பணியில் புதிய தெருவிளக்கு மின்கம்பம் அமைத்தல், புதிய மின்இணைப்புகள் பெறுதல் ஆகியவற்றிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தொகை செலுத்த வேண்டியுள்ளது. மற்றும் நெடுஞ்சாலைகளில் புதிய தெரு விளக்கு அமைக்கும் பணியில் நெடுஞ்சாலைத்துறைக்கு சாலை சீரமைப்பு கட்டணம் மாநகராட்சியினால் செலுத்தப்பட வேண்டியுள்ளது. எனவே இப்பணிக்கு ஆகும் உத்தேச செலவின விபரம் பின்வருமாறு.

| வ. எண் | பணி விபரம் | செலவின விபரம் |
|---|---|---|
| 1 | மின் சேமிப்பு கருவிகள் பொருத்துதல், மற்றும் புதிய தெருவிளக்குகள் பொருத்துதல் பணிக்கு ஆகும் செலவினம் | 24,67,16,600 |
| 2 | தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் நெடுஞ்சாலைத்துறைக்கு மாநகராட்சியினால் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்களினால் ஏற்படும் உத்தேச செலவினம் | 2,60,00,000 |
| | **மொத்தம்** | **27,27,16,600** |

முதலீட்டுத்தர மின் தணிக்கை (IGA) அறிக்கையின்படியும் RFP விலை விகிதப்படியும் ஏற்படும் தெருவிளக்கு ஆண்டு பராமரிப்பு செலவின விபரம் பின்வருமாறு.

| S.No. | Duration/Year | Total Amount |
|---|---|---|
| 1 | 1st. 10months (During implementation period) | 98,64,510/- |
| 2 | Year 1 (After successful commissioning of project) | 1,04,01700/- |
| 3 | Year 2 (After successful commissioning of project) | 1,04,01700/- |
| 4 | Year 3 to year 10 (Escalation rate in %) | 6.5% per year. |

மேலும் தெருவிளக்குகளின் பராமரிப்பு செலவினம் ஒவ்வொரு ஆண்டும பொருத்தப்படும் விளக்குகளின் எண்ணிக்கையினை பொறுத்து மாறுபடும். மற்றும் தேவையான புதிய தெருவிளக்குகளை RFP யில் வழங்கப்பட்டுள்ள விலை விகிதப்படி ஒவ்வொரு ஆண்டும் அமைக்கலாம். இப்பணியில் முதல் 10 மாதத்திற்க்குள் தற்போது உள்ள தெருவிளக்குகளை மேற்கண்ட நிறுவனம் பராமரித்து மின் சேமிப்பு கருவிகள் மற்றும் புதிய தெருவிளக்குகளை பொருத்தி முடிவு அறிக்கை சமர்ப்பித்த பின் 10 ஆண்டுகள் தொடர் பராமரிப்பு மேற்கண்ட நிறுவனம் மூவம் மேற்கொள்ளப்படும்.

எனவே ஈரோடு மாநகராட்சியில் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு மேற்கண்டவாறு மின்சிக்கன நடவடிக்கைகள் மேற்கொண்டு 42% மின்சேமிப்பினையும் மற்றும் தற்போதைய தெருவிளக்குகளின் பராமரிபபு செலவினத்தில் 15% சேமிப்பினையும் ஏற்படுத்தவும், புதிய தெருவிளக்குகள் அமைக்கவும் M/S. Schnell energy equipments private limited, Coimbatore மற்றும் M/S. Salzer electronics limited, Coimbatore கூட்டு நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

1.அரசின் வழிகாட்டு நெறிமுறைப்படி இம்மாநகராட்சியில் மேற்கண்டவாறு தெருவிளக்கு பணியில் மின்சிக்கன நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் புதிய தெருவிளக்குகள் அமைக்கும் அரசின் இத்திட்டப்பணிக்கு M/S. Schnell energy equipments private limited, Coimbatore மற்றும் M/S. Salzer electronics limited, Coimbatore கூட்டு நிறுவனத்தாருக்கு வேலை உத்தரவு வழங்க மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
2. ஒவ்வொரு ஆண்டும் மின் சேமிப்பினை உறுதி செய்து இப்பணியினை மேற்கொள்ளவும் செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
3. இத்திட்ட பணிக்கு அரசினால் திட்ட நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கபபட்ட தொகை மற்றும் இனிமேல் வழங்கப்படவுள்ள தொகைகள் நீங்கலாக ஏற்படக்கூடிய கூடுதலான செலவினத்தினை மாநகராட்சி நிதியிலிருந்து வரும் 10 ஆண்டிற்கு மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.
4. இத்திட்டத்திற்கு புதிய தெருவிளக்குகள் அமைத்தல் மற்றும் தொடர் பராமரிப்பினை மேற்கண்ட நிறுவனம் மூலம் 10 ஆண்டுகள் மேற்கொள்ளவும் இதற்கான செலவினத்திற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

5. இத்திட்டம் 10 ஆண்டுகளுக்கான செயல்முறைத்திட்டமாவதால், ஒவ்வொரு ஆண்டும் ஏற்படும் செலவினங்களை அந்தந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் சேர்த்துக்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

6. ஒவ்வொரு ஆண்டும் அமைக்கப்படும் புதிய தெருவிளக்குகளை மேற்கண்ட விலைவிகிதத்தில் அமைக்கவும், இதனை தொடர்ந்து இதன் பராமரிப்பினை RFP ஒப்பந்தப்புள்ளியில் மேற்கண்ட நிறுவனம் வழங்கியுள்ள பராமரிப்பு விலைவிகிதத்தில் மேற்கொள்ளவும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/2249/12**

**70. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**14)** ஈரோடு மாநகராட்சிக்குட்பட்ட வீரப்பன்சத்திரம், சூரம்பட்டி, பி.பெ.அக்ரஹாரம், எல்லப்பாளையம், கங்காபுரம், திண்டல் மற்றும் வில்லரசம்பட்டி ஆகிய பகுதிகளுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள சூரியம்பாளையம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஈரோடு மாநகராட்சியின் பராமரிப்பில் எடுத்துக் கொள்ள இம்மாமன்றத் தீர்மானம் எண்.139 நாள் 30.07.12-ல் அனுமதி பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இந்நிலையில் மேற்படி சூரியம்பாளையம் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் மூலம் 31.05.14 வரை ஈரோடு மாநகரப்பகுதிகளுக்கு விநியோகம் செய்யப்பட்ட குடிநீர் கட்டண நிலுவைத் தொகை ரூ.52.06 இலட்சத்தை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தினால் மேற்படி கூட்டுக்குடிநீர் திட்டத்தை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு தற்போதுள்ள நிலையில் வழங்கப்படும் என நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பராமரிப்புக்கோட்டம், ஈரோடு அவர்களின் கடிதம் எண்.கோ.சூரியம்பாளையம்/2012/இலஅ/நாள்:04.06.14ல் தெரிவிக்கப்பட்டது. அதன்படி மாமன்ற அனுமதி கோரி பொருள் வைக்கப்பட்டது.

இந்நிலையில் நிர்வாகப் பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பராமரிப்புக்கோட்டம், ஈரோடு அவர்களின் கடிதம் எண்.கோ.சூரியம்பாளையம்/2012/இலஅ/நாள்:24.06.14-ல் சூரியம்பாளையம் மற்றும் கொத்துக்காரன்புதூர் கூட்டுக்குடிநீர் திட்டங்களை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு வழங்க கீழ்கண்டவாறு மாமன்றத் தீர்மானம் நிறைவேற்றி அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலிருந்து சூரியம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தை ஈரோடு மாநகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்வது.
2) சூரியம்பாளையம் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூல் விநியோகம் செய்த குடிநீர் கட்டண நிலுவைத் தொகையினை உடனடியாக அரசின் தெளிவுரை பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துவது.
3) கொத்துக்காரன்புதூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தையும் ஈரோடு மாநகராட்சி பராமரிப்பில் எடுத்துக் கொள்வது.
4) கொத்துக்காரன் புதூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் விநியோகம் செய்த குடிநீர் கட்டண நிலுவைத் தொகையினை உடனடியாக அரசின் தெளிவுரை பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்துவது.

எனவே தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பிலுள்ள சூரியம்பாளையம் மற்றும் கொத்துக்காரன்புதூர் கூட்டுக்குடிநீர் திட்டங்களை மாநகராட்சியின் பராமரிப்பிற்கு எடுத்துக்கொள்ள மேற்கண்டவாறான வ.எண். 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ2/1921/12**

**71. அனுமதி வழங்கப்பட்டது.**

**15)** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை அரசாணை எண்.203 நாள் 26.05.2014–ன்படி ஹட்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஈரோடு மாநகராட்சி மண்டலம்–2க்குட்பட்ட வ.உ.சி. பூங்காவில் இரவு நேர சாலையோரம் வசிப்போருக்கான தங்கும் விடுதி கட்டும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.25,00,000/–க்கு இப்பணிக்கு 26.06.2014–ம் தேதி இ–டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதில் வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர்கள் பணிக்கான டேவணித் தொகையை செலுத்தியுள்ளார்கள். எனவே பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளியை மதிப்பீட்டு விலைவிகிதத்துடன் ஒப்புநோக்குகையில் வரப்பட்ட விபரம் பின்வருமாறு–

மெசர்ஸ் ஸ்ரீ எம்.எஸ் அண்டு கோ– 4.74 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம்
மெசர்ஸ் பி.டி.கே.கன்ஸ்ட்ரக்சன் – 6.08 சதவீதம் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட அதிகம்

எனவே பெறப்பட்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு விலை விகிதத்துடன் ஒப்புநோக்கும்போது மதிப்பீட்டு விலையை விட 4.73 சதவீதம் அதிகமாக ஒப்பந்ததாரர் மெசர்ஸ் ஸ்ரீ எம்.எஸ் அண்டு கோ ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளார். எனவே மேற்படி ஒப்பந்ததாரருக்கு மேலும் விலையைக் குறைத்து கொடுக்க கோரி இவ்வலுவலக ந.க.எண்.இ1/1035/2013 நாள் 27.07.2014–ம் தேதியில் அறிவிப்பு கொடுக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் தனது 28.06.2014–ம் தேதிய கடிதத்தில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.05 சதவீதம் குறைவாக செய்து கொடுக்க சம்மதம் தெரிவித்து மெசர்ஸ் ஸ்ரீ எம்.எஸ். அண்டு கோ அவர்கள் கடிதம் கொடுத்துள்ளார்கள். எனவே அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

ஹட்கோ நிறுவனத்தின் நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளதால் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

**இ1/1035/13**

**72. அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.**

**16)** இம்மாநகராட்சியின் சொத்துவரி, குடிநீர்க்கட்டணம், குத்தகை இனம், தொழில்வரி ஆகியவற்றின் வரிவசூல் மற்றும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் முதலான பதிவுகள் கணிணி மூலம் பதிவேற்றப்பட்டு வரிவசூல் மையங்கள் மற்றும் தகவல் மையங்கள் மூலம் பொதுமக்கள் பயன்படுத்தும் முறை நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது இதன் முன்னோடி முயற்சியாக இம்மாநகராட்சியின் 60 வார்டு மக்களும் தங்கள் வரியினங்களுக்கான தொகையை அவர்கள் இருக்கும் இடத்திலிருந்தே இணையதளம் மூலம் மாநகராட்சிக்கு செலுத்தும் முறையையும் மாநகராட்சி வலைதளத்தின் மூலம் மக்களுக்கு வழங்கலாம். இதுதொடர்பாக ஈரோடு மாநகரில் இயங்கிவரும் வங்கிகளில் வரிவசூல் மையங்கள் மூலமும், Credit / Debit Card-ஐ உபயோகப்படுத்தியும் மாநகராட்சி வரிவசூல் பணியை செய்ய விருப்பம் தெரிவித்து HDFC Bank Ltd, ICICI Bank மற்றும் Axis Bank Ltd. ஆகிய வங்கிகளிலிருந்து விண்ணப்பங்கள் கொடுத்துள்ளார்கள். அவ்வாறு கொடுக்கப்பட்ட விண்ணப்பங்களின் ஒப்புநோக்குப்பட்டியல் கீழ்கண்டவாறு.

| வ. எண் | சேவை | HDFC Bank Ltd | ICICI Bank | Axis Bank Ltd |
|---|---|---|---|---|
| 1 | மாநகராட்சி, நகராட்சி மற்றும் அரசு கணக்குகளை கையாள்வதில் உள்ள அனுபவங்கள் | 1.சென்னை மாநகராட்சி<br>2.கோயம்புத்தூர் மாநகராட்சி<br>3.மதுரை மாநகராட்சி<br>4.திருச்சிராப்பள்ளி மாநகராட்சி<br>5.தமிழ்நாடு மின்சார வாரியம்<br>6.தமிழ்நாடு சுற்றுலா கழகம்<br>7.வணிகவரித் துறை<br>8.Dr.M.G.R. மருத்துவ பல்கலைக்கழகம் | 1. நரசிங்கபுரம் நகராட்சி – கணக்குகள் மட்டும் | –– |
| 2 | வரி வசூல் பணி | 1.பணம் செலுத்தும் நுழைவாயில்<br>2.இன்டெர்நெட் வங்கி சேவை<br>3.Debit மற்றும் Credit அட்டைகள் உபயோகித்து பில் கட்டுதல்<br>4.சுலபமான வகையில் பில் கட்டுதல்<br>5.நடமாடும் (மொபைல்) வங்கி<br>6. பணம் கையாளும் சேவைகள்<br>7. காசோலை, கடிதங்கள் போடும் பெட்டிகள்<br>8. காசோலைகள், வரைவோலைகளை நேரடியாக பெற்றுச் செல்தல் | 1.பணம் செலுத்தும் நுழைவாயில்<br>2,இன்டெர்நெட் வங்கி சேவை<br>3.Debit மற்றும் Credit அட்டைகள் உபயோகித்து பில் கட்டுதல்<br>4.தானியங்கி பற்று வைத்தல்<br>5. பணம் கையாளும் சேவைகள்<br>6. காசோலை, கடிதங்கள் போடும் பெட்டிகள்<br>7. காசோலைகள், வரைவோலைகளை நேரடியாக பெற்றுச் செல்தல் | 1.இன்டெர்நெட் வங்கி சேவை<br>2. பணம் கையாளும் சேவைகள்<br>3. காசோலைகள், வரைவோலைகளை நேரடியாக பெற்றுச் செல்தல் |
| | சிறப்பு வசதி | 9. KIOSK எனப்படும் தானியங்கி வரிவசூல் இயந்திரம் அமைத்தல்<br>10. அனைத்து வசூல் மையங்களிலும் வசூல் பணியில் வங்கியின் ஆட்களை உபயோகித்தல் | –– | -- |
| 3 | தகவல் தரும் வழிமுறைகள் | மாநகராட்சிக்கு தேவையான படிவங்களில் கணக்குகளை தயார் செய்து கொடுத்தல்<br>1. Excel<br>2. CSV<br>3. PDF<br>4. SAP/ERP COMPATIBLE<br>5. Multicash/ MT 940<br>6. JD Edwards | மாநகராட்சிக்கு தேவையான படிவங்களில் கணக்குகளை தயார் செய்து கொடுத்தல்<br>1. Excel<br>2. CSV<br>3. PDF<br>4. SAP/ERP COMPATIBLE | மாநகராட்சிக்கு தேவையான படிவங்களில் கணக்குகளை தயார் செய்து கொடுத்தல்<br>1. Excel<br>2. CSV<br>3. PDF |
| 4 | வாயிலுக்கு வரும் வங்கி சேவைகள் | காசோலை மற்றும் வரைவோலைகளை அலுவலகத்திலேயே நேரில் வந்து பெற்றுச்செல்லும் வசதியை வங்கி ஏற்படுத்தித் தரும் | காசோலை மற்றும் வரைவோலைகளை அலுவலகத்திலேயே நேரில் வந்து பெற்றுச்செல்லும் வசதியை வங்கி ஏற்படுத்தித் தரும் | காசோலை மற்றும் வரைவோலைகளை அலுவலகத்திலேயே நேரில் வந்து பெற்றுச்செல்லும் வசதியை வங்கி ஏற்படுத்தித் தரும் |

மேற்கண்ட பட்டியலின்படி HDFC Bank Ltd, ICICI Bank மற்றும் Axis Bank Ltd ஆகிய வங்கிகள் வழங்கும் சேவைகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மாமன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**இ1/3587/14**

**73. இம்மாநகராட்சியின் 60 வார்டு பொதுமக்களும் தங்கள் வரியினங்களுக்கான தொகையை அவர்கள் இருக்கும் இடத்தில் இருந்தே இணையதளம் மூலம் மாநகராட்சிக்கு செலுத்துவதற்கு வசதியாக மாநகராட்சி வரிவசூல் பணியை செய்ய விருப்பம் தெரிவித்துள்ள HDFC Bank Ltd, நிறுவனத்திற்கு பணம் செலுத்தும் நுழைவாயில் அளிக்கவும், ICICI Bank Ltd, AXIS Bank Ltd ஆகிய வங்கிகளுக்கு வரிவசூல் மையங்கள் ஏற்படுத்தி சேவைகளை வழங்க தீர்மானிக்கப்பட்டது.**

**இடம்– ஈரோடு** | **மேயர்,**
**நாள் – 04.07.2014** | **ஈரோடு மாநகராட்சி**